




Registered as a Newspaper

பக்கங்கள் – 20
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 345

புதன்கிழமை
06 நவம்பர் 2024

ஐப்பசி 20
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை







# அரச சேவையில் மாற்றம் தேவை!

## வீண் செலவுகள் வேண்டாம் ஜனாதிபதி அநுர அறிவுறுத்து



கொழும்பு, நவ. 6
அரசாங்கத்தின் நோக்கத்துக்கும் அரச சேவைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் விதத்துக்கும் இடையில் இடைவெளிகள் காணப்படுகின்றன. இந்த விடயத்தில் மாற்றம் அவசியமாகவுள்ளது என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.
இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தினருக்கும் ஜனாதி

19

# சந்திரிகாவை கொல்லச் சதி?



**கொழும்பு, நவ. 6**
**ஸ்ரீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, தன்னைக் கொலை செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறலாம் என அச்சம் வெளியிட்டுள்ளார்.**

19

முச்சந்தி முரளி



"தேர்தல் எண்டவுடன எல்லாரும் பழைய நினைப்பில புலிப்பூச்சாண்டி காட்டுகினம்"

# தமிழர்களின் தவறான முடிவே பேரழிவுக்கு வழிவகுத்ததாம்

## ரிஷாத் பதியுதீன் கண்டுபிடிப்பு

மன்னார், நவ. 6
உணர்ச்சிகளும் எழுச்சிகளும் ஏற்பட்டதால், தமிழ் இளைஞர்கள் தவறான வழி சென்றார்கள். இதனால், ஏற்பட்ட யுத்தம் சகல

19

டியாகோர்கார்சியா தீவில் சிக்குண்ட

# இலங்கைத் தமிழ் அகதிகளை பிரிட்டனுக்குள் ஏற்கத் திட்டம்!

## கனவுபோல் உள்ளதாக அவர்கள் கண்ணீர்

லண்டன், நவ. 6
மிக நீண்டகாலமாக, டியாகோர்கார்சியா தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, இலங்கைத் தமிழ் அகதிகளை பிரிட்டனுக்குள் அனுமதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
சுமார் 60 இலங்கைத் தமிழ் புகலிடக்

19






கோத்தாபயவுக்கு எதிரான

# அரகலய போராட்டத்தின்போது புலம்பெயர் புலிகள் தலையீடு!

## நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 6
கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக்கு எதிராக, மிகப் பிரமாண்டமான முறையில் முன்னெடுக்கப்பட்ட 'அரகலய' போராட்டத்தில் புலம்பெயர் புலிகளின் தலையீடு இருந்ததாக நாமல் ராஜபக்ச குற்றஞ்சாட்டி யுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ராஜபக்சக்களின் அரசியல் பயணத்துக்கு முடிவுகட்டுவதற்கு புலம் பெயர் புலி ஆதரவாளர்கள் 2009 ஆம் ஆண்டிலிருந்து முயற்சித்துவருகின்றனர்.

19

# முறைப்பாடு 1,642!

கொழும்பு, நவ. 6
ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில், இதுவரை ஆயிரத்து 642 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
இதன்படி தேர்தல் சட்டங்களை மீறியமை

19

# காய்ச்சல் காரணமாக வயோதிபர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 6
காய்ச்சல் காரணமாக வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். துன்னாலை, குடவத்தையைச் சேர்ந்த கதிரமலை லட்சனம் (வயது-68) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
கடந்த மூன்றாம் திகதி அந்த முதியவருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் நேற்றுமுன்தினம் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதன் பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது

19



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










# வங்காள விரிகுடாவில் நாளை தாழமுக்கம்?

யாழ்ப்பாணம், நவ. 6

வங்காள விரிகுடாவில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி ஒன்று உருவாகியுள்ள நிலையில், இது நாளை தாழமுக்கமாக மாறும் என்று கருதப்படுகின்றது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்ததாவது:

முன்னரே குறிப்பிட்டபடி, இன்று (நேற்று) மத்திய வங்காள விரிகுடாவில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி ஒன்று உருவாகியுள்ளது. இது நாளைமறுதினம் (நாளை) வியாழக்கிழமை தாழமுக்கமாக மாற்றம் பெறும் வாய்ப்புள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. மாதிரிகளின் தற்போதைய நிலையின் படி இந்தத் தாழமுக்கம் மேற்காக நகர்ந்து எதிர்வரும் 10ஆம் திகதியளவில் வடக்கு மாகாணத்துக்கு அண்மித்துவரும் என எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (ம)



# விற்பனைச்சந்தை

யாழ்ப்பாணம், நவ,6

காரைநகர் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு, தொழில்துறைத் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், மாதாந்த விற்பனைச் சந்தை நிகழ்வு காரைநகர் பிரதேச செயலக வளாகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-25.66)

# மணி விழா

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் அதிபர் மு.செல்வஸ்தானின் மணி விழா நிகழ்வு இன்று காலை 8.30 மணியளவில் பாடசாலையின் ஒறேற்றர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலையின் கல்விசார் கல்விசாரா ஊழியர் நலன்புரிக் கழகத் தலைவர் தி.வேந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் 'ஸ்கந்தாவின் செல்வம்' எனும் நூலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'பிரபஞ்ச நேசம்' செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ.6
காவேரி கலா மன்றத்தின் 'பிரபஞ்ச நேசம்' இயற்கை நேய செயலணியின் நான்காவது செயலமர்வு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. செயலமர்வின் வளவாளராக காவேரி கலா மன்றத்தின் நிர்வாக இயக்குநர் யோசுவா கலந்துகொண்டு 'காலநிலை மாற்றமும் உயிரியல் பல்வகைமையும்' என்ற தொனிப்பொருளில் கருத்துரையாற்றினார். (ச-25, 27)

# நூலகதின விழாவும் இதழ் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ. 6
யாழ்.இராமநாதன் கல்லூரியின் நூலகதின விழாவும், இராம ஒளி இதழ்-9 சஞ்சிகை வெளியிடும் நிகழ்வுகள் கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் தலைமையில்சுன்னாகத்தில் அமைந்துள்ள கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் இன்று புதன்கிழமை மு.ப.11.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. நிகழ்வுகளில் வலிகாமம் வலய சங்கீதபாட ஆசிரிய ஆலோசகர் மாணிக்கம் தேவகாந்தன் பிரதம விருந்தினராகவும், கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் திருமதி.கமலராணி கிருஷ்ணபிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25,66)

# 'சீத்துவக்கேடு' நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், நவ.6
காரைக்கவி கந்தையா பத்மானந்தன் எழுதிய தொலைந்துவிட்ட வாழ்வியல் நினைவுகள் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பான 'சீத்துவக்கேடு' நூலின் அறிமுகவிழா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில், நல்லை ஆதீன மண்டபத்தின் காரை சுந்தரம்பிள்ளை அரங்கில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், வட மாகாணப் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் கௌரவ விருந்தினராகவும், ஜீவநதி சஞ்சிகையின் ஆசிரியர் க.பரணீதரன், எங்கட புத்தகங்கள் குழும நிறுவுநர் கு.வசீகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25,66)






# சிங்கப்பூர் பத்திரிகை மன்றம் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 6
சிங்கப்பூர் பத்திரிகையாளர் மன்றத்தின் தலைவர் பேட்ரிக் டேனியல் மற்றும் பிரதிநிதிகள் குழுவினர் வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள வட மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். இதன் போது வட மாகாணத்தின் சுற்றுலாத் துறைக்கான போக்குவரத்து வசதி வாய்ப்புகள் , அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள், தற்போதைய பொருளாதார நிலை போன்றன தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. அத்தோடு வட மாகாணத்திலிருந்து உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்து பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குத் தடையாகவுள்ள காரணிகளை எவ்வாறு வெற்றி கொள்ள்லாம்? என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (25-66)

# 'கலாதீபம்' பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், நவ,6
கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகத்தினரால் கலாதீபம் மாதாந்த மின் இதழ் வெளியிடப்பட்டுள்ளது. நவம்பர் மாதத்தில் கலாசாலையில் இடம் பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பாக குறித்த இதழ் வெளிவந்துள்ளது. இதனை noolaham.org எனும் இணையத்தள முகவரிக்குச் சென்று தரவிறக்கம் செய்து பார்வையிடலாம் எனக் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தெரிவித்துள்ளார். (ச-25,66)



மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்தப் பொதுக் கூட்டம் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பது தொடர்பான தெளிவுபடுத்தல் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டதுடன், மாதாந்தக் கொடுப்பனவுக்கான கையொப்பமிடல் செயற்பாடும் இடம்பெற்றது. (பி-66)

# மணிவிழா,

யாழ்ப்பாணம், நவ.6
யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தானின் மணிவிழா, கல்லூரியின் கல்விசார், கல்விசாரா ஊழியர் நலன்புரிக் கழகத் தலைவர் தி.வேந்தகுமார் தலைமையில், சுன்னாகத்தில் அமைந்துள்ள கல்லூரியின் ஒறேற்றர் மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் மலர் வெளியீடும், விழா நாயகன் கௌரவிப்பும் நடைபெறவுள்ளது.(ச-25,66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை மிகவும் அவசியம்.ஒரு சிலருக்கு திடீர் செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**இடபம்:** வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயல்படுவார்கள். வாழ்க்கைத்துணை வழியில் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். பிள்ளைகள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். திடமாகச் சிந்தித்துச் செயல்படுவீர்கள். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** காலையில் வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். பிள்ளைகளா[illegible]ல சங்கடங்கள் ஏற்படக்கூடும். உணவு தொ[illegible]ான அலர்ஜி ஏற்படக்கூடும் என்பதால், வெளியிட[illegible]களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம் :** புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது. தாயின் உடல்நலனில் கவனம் தேவை. தாய்வழி உறவினர் களால் செலவுகள் ஏற்படக்கூடும். மனதில் அடிக்கடி சோர்வு ஏற்பட்டு நீங்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகத்துடன் காணைப்படுவீர்கள்.

**கன்னி:** மனதில் உற்சாகமும் தைரியமும் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வார். மாலையில் குடும்பத்தினருடன் நண்பர் அல்லது உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** அரசாங்கக் காரியங்களில் தடை, தாமதம் ஏற்படும். அதிகாரிகளிடம் பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக்கொள்ள முயற்சி செய்யவும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**விருச்சிகம் :** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருப்பார்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக் கூடும் என்ப தால் கையிருப்பு கரையும்.

**மகரம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். தேவையான பணம் கிடைக்கும். உறவினர் கள் சிலர் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதையும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். தந்தை வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும்.

**மீனம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங் கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










## மாதிரிச் சந்தை

யாழ்.கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை மாணவர்களின் மாதிரிச் சந்தை நிகழ்வு அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் பாடசாலைக்கு முன்பாக இன்று புதன்கிழமை காலை 8.30 மணி முதல் மு.ப.11 மணிவரை இடம்பெறவுள்ளது. (ச-25,66)

# ஜனநாயகப் பாடம் எடுப்பதற்கு ரணிலுக்கு உரிமை இல்லை!

## சீறுகின்றார் ரில்வின் சில்வா

கொழும்பு, நவ.6

அரசமைப்பு மற்றும் ஜனநாயகம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க எமக்குப் பாடம் எடுக்கவேண்டியதில்லை. ஜனநாயகம் பற்றிக் கதைப்பதற்கு அவருக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் நிராகரித்துவிட்டனர். தோல்வியை ஏற்று ஒதுங்கி இருக்காமல் பொய்களை பரப்பும் நடவடிக்கையில் அவர் ஈடுபட்டுள்ளார். அரசமைப்பு தொடர்பில் எமக்கு பாடம் எடுப்பாராம். அவரிடம் பாடம் கற்பது ஆபத்தானது. அரசமைப்பைமீறுவது எப்படி என அவரிடம் கற்கலாம். ஜனாதிபதியாக தெரிவானது முதலே அரசமைப்புக்கு புறம்பாகவே அவர் செயற்பட்டுள்ளார். உள்ளாட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, அரசமைப்பு மற்றும் ஜனநாயகம் பற்றி பேசுவதற்கு ரணிலுக்கு உரிமை கிடையாது. ஜனநாயகம் மற்றும் அரசமைப்பு தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கதான் கற்கவேண்டும்-என்றார். (எ-44)

# ஊழலற்ற தேசம் கோஷம் அநுர அரசுக்கு முரண்!

## ஈ.பி.டி.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணத்திலுள்ள பனை அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவராக ஊழல் மோசடி நிறைந்த ஒருவரை நியமித்துள்ளமையானது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஊழலற்ற தேசம் என்ற நிலைப்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளது.

-இவ்வாறு ஈ.பி.டி.பி.யின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக பனைசார் உற்பத்தித் தொழிலை முன்னெடுக்கும் மக்களை பெரும் சங்கடத்துக்குள் உள்ளாக்கியுள்ளது. அத்துடன் அத்துறை சார்ந்தவர்களின் உழைப்பும் முதலீடுகளும் கேள்விக்குறியாக இருந்துவரும் நிலையில் இந்த நியமனத்தால் மேலும் பாதிப்பை எதிர்கொள்ளவுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (ச)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருப்பியல்
வையத் தலைமை கொள்

அங்கஜன்
இராமநாதன்

# சொல் வீரனல்ல செயல் வீரன்


நான் சொன்னதை செய்து முடித்தவன்:
என் செயல்தான் என் மொழி.
உங்கள் நலன் என் முன்னுரிமை,
உங்கள் ஆதரவு என் சக்தி

தபால்பெட்டி சின்னத்திற்கு வாக்களிப்பீர்

X 1



# நாடாளுமன்றத் தேர்தல் - 2024




ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா
தலைமையில் களமிறங்கும்

சுயேச்சைக்குழு -14


X

தமிழ்த் தேசியத்தின் கடைசி நம்பிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்துக்கு அபிவிருத்தி நிதியம்

## வேட்பாளர் மணிவண்ணன் தெரிவிப்பு



யாழ்ப்பாண மாவட்டத்துக்கென ஒரு அபிவிருத்தி நிதியத்தை உருவாக்கி அதனூடாக மக்களினுடைய பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளரும் சட்டத்தரணியும், யாழ்ப்பாண மாநகரசபை முன்னாள் மேயருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கற்கோவளம், புனிதநகர்ப் பகுதியில் மக்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இம்முறை மக்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் . குறிப்பாக கடந்த காலங்களில் நாடாளுமன்றம் சென்றவர்கள், மக்களுக்கு எதுவும் செய்யாதவர்களை நிராகரிக்க வேண்டும். இளைஞர்களைத் தெரிவு செய்து அவர்களை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-27.20)

பாராளுமன்றத் தேர்தல் : 2024

எமது முன்னுரிமைகளை நிறைவேற்ற எனக்கும் வாக்களியுங்கள்



1. உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படையில், தியாகம் புரிந்தவர்களுக்கும் எதிர்காலச் சந்ததிக்கும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவோம்.

2. அடையாளம், நிலம், தொன்மை விழுமியங்களைப் பாதுகாக்கும் அடிப்படையில் பெண்கள் மற்றும் இளையோருக்கு சம சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் அரசியலை முன்னெடுப்போம்.

3. திறமைக்கு முன்னுரிமை வழங்கி, தொழில் முனைவோருக்கான அரசியல் பொருளாதாரச் சூழலை ஏற்படுத்துவோம்.

4. கடல் மற்றும் நில வளங்களைப் பாதுகாப்பதுடன் நவீன தொழில்நுட்பத்துடன் விவசாய உற்பத்தி வருமானத்தையும் மேம்படுத்துவோம்.

5. மாணவர்களுக்கு சமமான வளங்களையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி, விஞ்ஞான ரீதியாக அறிவூட்டப்பட்ட சமூகத்தை உருவாக்குவோம்.

6. ஒடுக்கப்பட்டவர்கள், போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சம வாய்ப்புகளை உருவாக்குவோம்.

7. குறுகிய கால அரசியல் இலாபங்களுக்காக பல்வேறுபட்ட காரணிகளால் அரசியல் பிளவுகுட்பட்டுள்ள தமிழ் மக்களை ஒருமித்த அரசியல் கூட்டுக்குரலாக மாற்றுவதற்கான அணிதிரட்டலை இலகுபடுத்தல்.

6

சந்திரகாசன்
இளங்கோவன்
இலங்கைத் தமிழரசுக் கட்சி

அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடியலை நோக்கி ...

பாராளுமன்றத் தேர்தல் 2024



தீர்வினைத்தேடி
தியாக எழுவோம்
தோழமையோடு
முடிவினை
எட்டுவோம்...

உங்கள் தோழன்
சுரேஷ் பிரேமச்சந்திரன்
அவர்களுக்கே உங்கள் வாக்கு

1

ஐக்கியம் தேசியம் ஜனநாயகம்

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி (DTNA)

பாராளுமன்ற தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்



வளமான நாடு
அழகான
வாழ்க்கை



6 X

ஸ்ரீதரன்
பூலோகராஜா
M.B.A., J.P (Whole Island)



2 X

கருணநாதன் இளங்குமரன்
இலங்கை மின்சார சபை சேவை சங்கத்தின்
வட மாகாண இணைப்பாளர்



7 X

மருங்கன் மோகன்

திசைகாட்டியில் நாம் ஒன்றாக
தேசிய மக்கள் சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பராத்தே’ சட்டம்மீதான தடையை நீடியுங்கள்

## ஐ.ம. சக்தி கோரிக்கை

**கொழும்பு , நவ.6**

**எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதியுடன் காலாவதியாகவுள்ள பராத்தே சட்டம் மீதான தடையைத் தொடர்ந்து நீடிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

பராத்தே சட்டம் என்பது வங்கிகளில் தமது சொத்துகளை ஈடு வைத்து கடன் பெற்று கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாதவர்களின் சொத்துகளை வங்கிகள் பறிமுதல் செய்வதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கிய சட்டமாகும்.

இந்தச் சட்டம் முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவால் கொண்டு வரப்பட்டது.

ராஜபக்சக்களின் ஆட்சியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக வங்கிகளில் கடன் பெற்று கடனை திருப்பிச் செலுத்தமுடியாத பலரின் சொத்துகளை வங்கிகள் பறிமுதல் செய்தமையால் பல சிறிய,நடுத்தர தொழில் செய்வோர் தற்கொலை செய்து கொண்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றம் டிசெம்பர் 15 ஆம் திகதி வரை தடைவிதித்திருந்தது.

இந்தத் தடையை தொடர்ந்து நீடிக்குமாறே எரான் விக்கிரமரத்ன கோரிக்கை விடுத்துள்ளார். (ச-6)

## நிறைவேற்று அதிகாரம்; நீக்குமாறு கோரிக்கை

கொழும்பு , நவ.6

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குமாறு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து திறந்த கடிதமொன்றை அனுப்பி இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார். பயங்கரவாதத் தடைச்சட்டம், நிகழ்நிலை காப்புச்சட்டம் என்பவற்றையும் நீக்க வேண்டுமெனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

## சாதாரணதரப் பரீட்சை விண்ணப்பம் கோரல்

கொழும்பு , நவ.6

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய, குறித்த பரீட்சைக்கான விண்ணப்பங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை நிகழ்நிலை முறைமை ஊடாக மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படுமெனப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அனைத்துப் பாடசாலை விண்ணப்பதாரிகள் தங்கள் பாடசாலைகளின் அதிபர்கள் ஊடாகவும், தனியார் விண்ணப்பதாரிகள் தாமாகவே இணையத்தினூடாகவும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic ஆகிய இணையத்தளங்களில் இதுதொடர்பான அறிவுறுத்தல்களைக் கவனமாகப் படித்து அதற்கேற்ப விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறும், எதிர்வரும்30 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் பரீட்சைத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-66)



## இலங்கை - இந்தியா சுற்றுலாத்துறை தலைவர்களுக்கிடையில் சந்திப்பு

தமிழ்நாடு பாண்டிச்சேரி அரசின் சுற்றுலாத்துறை அமைச்சருக்கும் வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத் தலைவர் சு.சுதர்சனுக்கும் இடையிலான சந்திப்பு பாண்டிச்சேரி அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இச்சந்திப்பில் இலங்கை - இந்திய சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பாகவும், இந்திய சுற்றுலாப்பயணிகள் இலங்கையை பார்வையிடுவதற்கான சுற்றுலா ஒழுங்குகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது சுற்றுலா தொடர்பான விளக்கக் கையேடும் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. (ச-25,316)

## 5 ஆண்டுகளில் ஆட்சியைப் பிடிப்போம்

### நாமல் சூளுரை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி நிச்சயம் மீண்டெழும். அடுத்த ஐந்தாண்டுகளுக்கு பிறகு ஆட்சியை பிடிக்கும் மாபெரும் அரசியல் சக்தியாக மாறுவோம். அதற்குரிய வியூகம் வகுக்கப்பட்டுவருகின்றது என்று நாமல் ராஜபக்ச சூளுரைத்துள்ளார்.

இந்த அரசாங்கம் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு தொடர வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் நாடு பல சவால்களைச் சந்திக்க நேரிடும். நாம் ஐந்தாண்டுகள்வரை காத்திருப்போம். அதற்கு முன்னர் அரசாங்கத்தின் இருப்புக்கு ஆபத்து ஏற்பட்டால் எதிரணியில் இருந்தேனும் ஆதரவு வழங்குவோம். கட்சி மறுசீரமைக்கப்படும். புதிய தலைவர்கள் வருவார்கள். அடுத்த அரசாங்கத்தை எமது கட்சிதான் அமைக்கும். பலமான கூட்டணி அமைக்கப்படும்.

ஜனாதிபதிகூட எமது கட்சியில் இருந்துதான் தெரிவுசெய்யப்படுவார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## இணைய வழி நிதி மோசடி விசாரணைக்கு சீனா உதவி

கொழும்பு, நவ.6

இணைய வழி நிதி மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள வெளிநாட்டுப் பிரஜைகளிடம், சீன மற்றும் ஏனைய நாடுகளின் அதிகாரிகளின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபர் திணைக்களம் புலனாய்வுப்பிரிவினருக்கு அறிவுறுத்தியுள்ளது. சீன மற்றும் இந்தியப் பிரஜைகள் 500 பேர் சுற்றுலா விசாவில் வந்து தங்கியிருந்து இணைய வழி நிதி மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25,6)




எரிஞ்ச வீட்டில பிடுங்கிறது லாபமெண்ட மாதிரி , ஆக்களில்லாக் காணிக்குள்ளயும் எடுக்கிறதெல்லாம் லாபம் தானே. ஆமிக்காரர் சிலர் இப்ப அதைத் தான் செய்யினம். ஆமிக்காரரின்ர அனுசரணை இருக்கெண்ட உசாரில எங்கடையள் சிலதுகளும் அதுக்கு எடுபட்டு நிக்குதுகள். கிட்டடியில உந்த வசாவிளான் - அச்சுவேலி றோட்டில ஒருபகுதியை ஆமி திறந்து விட்டதெண்டு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும் தானே. எப்பவுமே தங்கட பகுதியில ஒரு துண்டுக் காணியை விட்டாக்கூட அங்கத்தைச் சனத்துக்கு ஒரு புளுகம் வந்திடும். தாங்கள் முப்பது வருசத்துக்கு முதல் விட்டிட்டு ஓடியந்த காணியள், வீடுகள் எல்லாம் எப்பிடி இருக்கு எண்டு பாக்கப் போவினம். சில இடங்களுக்கு போக ஏலாட்டி தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வருவினம். இந்தமுறையும் ஒரு கிலோமீற்றர் நீளமான றோட்டைத்தான் ஆமி விட்டதே தவிர றோட்டுக் கரையில இருக்கிற காணியளை விடேலை. எண்டாலும் றோட்டில நிண்டாவது தங்கட காணியள் எப்பிடியிருக்குது எண்டு ஒரு எட்டுப்போய் பார்த்திட்டு வருவம் எண்டு சனங்கள் போயிருக்குதுகள்.

முப்பது வருசத்துக்குப் பிறகு தங்கட வீட்டுக்காணியுள்ள றோட்டில போற சந்தோசத்தோட அப்பிடியே அங்க நிண்டபடியே தங்கட காணியளைப் பாக்க வெளிக்கிட்டவைக்கு பக்கெண்டு போட்டுது. காணியளின்ர சொந்தக்காரரான தாங்கள் றோட்டில இருந்து ஒரு அடி கூட காணிக்குள்ள வைக்கேலாமல் இருக்க, அவையின்ர காணிக்குள்ள ஒரு நாலைஞ்சு பேர் எந்தப் பயமுமில்லாமல் அங்க நிக்கிற மரங்களை வெட்டித்தள்ளிக்கொண்டு நிண்டிருக்கினம். ஆமிக்காரர் தான் தங்கட தேவைக்கு மரங்களை வெட்டித் தறிக்கிறாங்கள் போல எண்டுதான் முதல் இவையள் நினைச்சிருக்கினம். ஆனால் கொஞ்சத்தில மரம் வெட்டுறவை தமிழில கதைச்சதை வைச்சு, 'உது ஆமியில்ல, எங்கட சனம் தான்' எண்டது விளங்கிட்டுது. அதால கொஞ்சம் பயம் குறைய, காணிக்கு கிட்டப் போய் 'அண்ணை இது எங்கட காணி, ஆரைக் கேட்டு உந்த மரங்களை வெட்டுறீங்கள்? எண்டு கேட்டிருக்கினம். அதுக்கு மரம் வெட்டுறவை ' ஆரைக் கேக்கவேணும்? அதெல்லாம் கேக்க வேண்டியவைய கேட்டுத்தான் வெட்டுறம். எண்டிட்டு இவையை ஒரு புழு மாதிரிப் பார்த்திட்டு தங்கட வேலையைத் தொடர்ந்திருக்கினம்.

அநுர வந்தால் எல்லாம் மாறிடும் எண்டாங்கள், இப்ப அநுரவின்ர ஆட்சியிலையும் இப்பிடி அநியாயம் தானே நடக்குது எண்டு காணிக்காரர் கொஞ்சம் இறுக்கிச் சொல்லியிருக்கினம். அதைக்கேட்டவுடன் மரங்களை வெட்டினவைக்கு கோபம் பத்திக்கொண்டு வந்திட்டாம். 'அநுரதான் எங்கட தலைவர். அவர் சொல்லித்தான் ஆமிக்காரர் எங்களை மரம் வெட்ட விட்டவை. இனி அநுரவை பிழையாக் கதைச்சால் அவ்வளவுதான்' எண்டு கோடரியைத் தூக்கிக் காட்டி இருக்கினம். காணிக்காரர் 'காணியும் வேண்டாம் மரமும் வேண்டாம் ஆளை விட்டால் காணும்' எண்டு பிடரியில கால் பட அங்க எடுத்த ஓட்டத்தை வீட்ட வந்தபிறகுதான் நிப்பாட்டினவையாம். 'நாடு அநுரவோட, அநுரவோ கள்ளக்காணிக்குள்ள மரம் வெட்டுறவையோட போல' எண்டு அந்தக் காணிக் காரர் புலம்புகினம். இதுதான் அநுர கொண்டந்த மாற்றம் கண்டியளோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# அமெரிக்காவும் நீதியும்

அமெரிக்க ஜனாதிபதியைத் தெரிந்தெடுப்பதற்கான வாக்களிப்பு நடைபெற்றுள்ளது. உலகப் பொலிஸ் காரன் என்று கூறப்படும் அமெரிக்காவை கட்டியாளப்போவது யார் என்பது விரைவில் தெரிந்து விடும். ரஷ்யா - உக்ரைன், இஸ்ரேல் - ஹமாஸ் போர் களால் ஒரு விதப் பதற்றம் தொற்றியிருக்கும் நிலையில் நடக்கும் இந்தத் தேர்தல் வழக்கத்தை விடவும் அதிக அவதானத்தைப் பெற்றிருக்கின்றது. அமெரிக்க ஜனாதி பதித் தேர்தலில் அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும், துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸும் களமிறங்கியிருக்கும் நிலையில், அவர்களில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பதிலேயே அமெரிக் காவின் எதிர்கால நகர்வுகள் தீர்மானிக்கப்படவிருக் கின்றன.

இராணுவ - பொருளாதாரப் பலத்தால் அமெரிக்கா உலகில் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக - அளவிட முடியாத அதிகார செல்வாக்குடன் இருக்கின்றது. உலகில் நடந்து முடிந்த போர்களில் - தற்போது நடந்துகொண்டிருக்கும் போர்களில் அமெரிக்காவின் தலையீடுகள் - அழுத்தங்கள் இருந்தன என்பது வெளிப்படையான ஒன்று. இலங்கை யில் நடந்த உள்நாட்டுப் போரில் அமெரிக்காவின் தலை யீடுகள் இருந்தமை பல சந்தர்ப்பங்களில் வெளிப்பட் டிருந்தது. தமிழ் மக்களின் உரிமைகளுக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்படுவதற்கு அமெரிக்கா இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கிய ஆதரவும் முக்கிய மான காரணம் என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட ஒன்று. இலங்கையில் தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்காக நடத்தப்பட்ட போராட்டம் கொடூர மான முறையில் உலகநாடுகளின் ஆதரவுடன் ஒடுக்கப் பட்டது. சிறிய நிலப்பரப்புக்குள் அடைக்கப்பட்டிருந்த பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட கொடூரமான தாக் குதல்களில் பல்லாயிரக்கணக்கானவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன - பலர் அங்கவீனமாக்கப்பட்டனர் - பலர் காணாமல் ஆக்கப்பட்டார்கள். இலங்கை அரசாங் கத்துக்கு ஆதரவளித்து போரை முடிவுக்குக் கொண்டுவர உதவிய சர்வதேச நாடுகள், தமிழ் மக்களின் மனங்களில் ஆறாத வடுவை ஏற்படுத்திய இறுதிப்போரில் குற்ற மிழைத்தவர்களைத் தண்டிப்பதில் அதிக அக்கறை காட்டவில்லை. ஆனாலும் தங்களுக்கான நீதிக்காக அந்த நாடுகளிடமே கையேந்த வேண்டிய கையறு நிலையில் தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

தமிழ் மக்கள் இறுதிப்போரில் நடந்த இனப்படு கொலைக்கான நீதிக்காக சர்வதேச நாடுகளை மட்டும் நம்பிக்கொண்டிருப்பது சரியானதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது உலக நடப்புகள். இலங்கையில் இறுதிப் போரில் தமிழ் மக்கள் எவ்வாறு கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டார்களோ அதைப்போன்ற ஒரு கொடூரமே இப்போது காஸாவில் நடக்கின்றது. அதைப்போன்றே உக்ரைன் மீது ரஷ்யாவும் மிலேச்சத் தனமான தாக்குதல்களை நடத்துகின்றது. ஆனால் இந்தப் போர்களைத் தடுப்பதற்கு எந்த வல்லரசும் முயற்சிக்கவில்லை. காஸாவிலும், உக்ரைனிலும் நடக்கும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர் பாக ஐக்கிய நாடுகள் சபையோ, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையோ பாராமுகமாகவே இருக்கின்றன. வல்லரசுகளின்பிடியில் இருக்கும் இவை அறிக்கைகளுக்கு அப்பால் நகர அதிகாரமற்றிருக்கின்றன. கொத்துக்கொத் தாகக் கொல்லப்படும் அப்பாவி மக்கள் பற்றிக் கரிசனை கொள்ளாதிருக்கின்றன. அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்திருக்கின்றன.

அமெரிக்கத் தேர்தல் முடிவு எதுவாக இருந்தாலும் இவை எதுவும் மாறப்போவதில்லை. அமெரிக்கா உட் பட வல்லரசு நாடுகள் ஒருபோதும் தங்கள் உரிமை க்காகக் குரல்கொடுக்கும் ஒரு சிறு இனக்குழுவுக்காக சிந்திக்கப்போவதில்லை. அவற்றை அந்த நாடுகள் தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான ஒரு வாய்ப்பாகவே பயன்படுத்திக்கொள்கின்றன. அவை தங்கள் சார்ந்தே தீர்மானங்களை எடுத்துக் கொள்கின் றன. தமிழ்த் தரப்புகளும் அதைப் புரிந்துகொண்டு செயற்படாவிட்டால் எப்போதும் இறுதிப்போரில் நடந்த குற்றங்களுக்கான நீதி எட்டாக்கனியாகவே இருக்கும்.




# கூட்டமைப்புடன் கூட்டணி இன்னமும் தீர்மானமில்லை

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.6**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் எந்தவித கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை என ஜே.வி.பி. கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

செய்தியாளர் சந்திப்பில் நேற்றுமுன்தினம் அவர் இதனைக் கூறியுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்திக்கே ஆதரவளிக்கவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பகிரங்கமாக அறிவித்திருந்தார். இதன்படி, அந்தத் தரப்பினர் சஜித் பிரேமதாஸவுக்கே ஆதரவளித்தனர். எனவே, தேர்தல் தொடர்பில் அவர்களுடன் எந்தவித கலந்துரையாடலிலும் தற்போது ஈடுபடவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# தேர்தல் அலுவலர்கள் கொழும்புக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ.6

எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தல் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசிக்கும் வகையில் சகல மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவால் இன்று புதன்கிழமை கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் செயலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் பங்கேற்பதற்காகவே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச-66)

# திசைகாட்டி ஜே.வி.பி. மோதல்

ஜே.வி.பி.யினருக்கும், திசைகாட்டியினருக்கும் இடையில் மோதல் ஆரம்பித்துவிட்டது. எனவே, திசைகாட்டியினரை ஜே.வி.பி.யினர் விரைவில் விரட்டியடிப்பார்கள் என்று புதிய ஜனநாயக முன்னணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் நிமால் லான்சா தெரிவித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார வேலைத் திட்டமே தற்போதும் தொடர்கின்றது. புதிதாக ஒன்றும் செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# டிசெம்பர் முதல் இலத்திரனியல் அ.அட்டைகள்

யாழ்ப்பாணம், நவ.6

எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் வாரங்களில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகம் ஆரம்பிக்கப்படும் என ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலத்திரனியல் அடையாள அட்டைக்கு பயன்படுத்தப்படும் சுமார் 2.3 மில்லியன் புதிய அட்டைகள் ஏற்கனவே கிடைத்துள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)



# இறக்குமதி சீனிக்குப் பண்டவரி நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.6

இறக்குமதி செய்யப்படும் சீனிக்கு, இதுவரை விதிக்கப்பட்டிருந்த விசேட பண்ட வரி மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சீனிக்கு கடந்த வருடம் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஒரு வருட காலத்துக்கு 50 ரூபா விசேட வர்த்தக பண்ட வரி விதிக்கப்பட்டது. அதன் செல்லுபடியாகும் காலம் நவம்பர் 1 ஆம் திகதி முடிவடைய இருந்த நிலையில் அரசாங்கம் குறித்த விசேட வர்த்தக பண்ட வரியை டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடித்துள்ளது. (ச)

## நாளை

07.11.2024

வியாழக்கிழமை - ஐப்பசி - 21

சுபநேரம் : 07.35 - 09.05

ராகுகாலம் : 01.35 - 03.05

## நாளொரு நல்வார்த்தை

**உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்**

*- மாட்டின் லூதர்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
06.11.2024
புதன்கிழமை

அப்பாவித்தனமாக இருப்பது மனதுக்கு மட்டுமே நல்லது. மூளைக்கு அது நல்லதல்ல.

- அனடோல் பிரான்ஸ்

# தமிழ் மக்கள் தங்கள் சொந்த மண்ணில் நிம்மதியாக வாழவே என் அரசியல் போராட்டம்



## மனம் திறக்கிறார் அங்கஜன் இராமநாதன்

■ நேர்கண்டவர்: யாழின்பன்

**கே: நீங்கள் இதுவரை காலமும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்ற தேசியக் கட்சியின் சார்பிலேயே அரசியலில் இருந்தீர்கள், தேர்தலில் போட்டியிட்டீர்கள். ஆனால் இப்போது தனியொரு கட்சியில் தபால்பெட்டிச் சின்னத்தில் போட்டியிடக் காரணம் என்ன?**

ப: நான் கடந்த 15 வருடங்களாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனேயே பயணித்தேன். அதற்கான காரணம், அங்கிருந்தால் மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க முடியும். அதனால் தான் அந்தக் கட்சியில் நான் பயணித்தேன். ஆனால் அடிப்படையில் நானும் தமிழ்த்தேசியக் கட்சிப் பாரம்பரியம் உடையவன் தான். என்னுடைய தந்தையாரும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக இருந்தவர் தான். எப்போதும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தித்தான் சுதந்திரக்கட்சியில் இருந்தேனே தவிர, மாறாக சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிபோல மக்களுடன் நான் நடந்துகொள்ளவில்லை. இப்போது அந்த சுதந்திரக் கட்சி மூன்றாக உடைந்திருக்கிறது. குறிப்பாக நான் கடந்த தேர்தலில் போட்டியிட்ட கைச் சின்னம் நீதிமன்றத்தால் முடக்கப்பட்டிருக்கிறது. கடந்த தேர்தலில் ஒரு தேசியக் கட்சியின் சார்பில் நான் போட்டியிட்டபோதே, யாழ் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் அதிகூடிய விருப்புவாக்குகளால் மக்கள் என்னை வெல்லவைத்தார்கள். 'நீங்கள் தேசியக் கட்சியில் இல்லாமல் தனியாக ஒரு தமிழ்க் கட்சியில் போட்டியிட்டிருந்தால் இன்னும் அதிக வாக்குகளை உங்களுக்கு வழங்கி இருப்போம்' என்று மக்கள் என்னிடம் சொல்லியிருந்தார்கள். அப்படி மக்கள் கேட்டதற்கிணங்க இந்தமுறை தனிக்கட்சியில் போட்டியிடுகின்றேன்.

**கே: இப்போது நாடு முழுதும் மாற்றத்துக்கான அலையொன்று வீசுகின்றது. இந்தநிலையில் நீங்கள் வழக்கமான கட்சியை விடுத்து புதிய கட்சியில், புதிய சின்னத்தில் போட்டியிடுகின்றீர்கள். இது உங்கள் வெற்றியைப் பாதிக்காதா?**

ப: மாற்றத்துக்கான அலையென்று சொல்லப்படுவது கட்டமைப்பு மாற்றத்தைத் தான். அந்தக் கட்டமைப்பு மாற்றமாக மக்கள் கோருவது காலம் காலமாக ஊழல் செய்துகொண்டு, மக்களுக்கான வேலைகளைச் செய்யாமல் இருப்பவர்களை மாற்றவேண்டும் என்றுதான். நான் அப்படி ஊழல்வாதியுமல்ல, மக்களுக்கான பணியைச் செய்யாதிருப்பவனும் அல்ல. நான் தொடர்ச்சியாக மக்கள் பணி செய்து வருகின்றேன். அப்படியானவர்கள் தான் தமது பிரதிநிதியாக வரவேண்டுமென எண்ணுகின்றனர். எனவே என்னை மக்கள் கடந்தமுறையை விடவும் அமோக வெற்றிபெறச் செய்வார்கள் என்பது திண்ணம்.

**கே: ஆனால் மக்கள்விரோதச் செயற்பாடுகளிலும், ஊழல்களிலும் திளைத்த அரசாங்கங்களோடுதானே நீங்களும் இணைந்து பணியாற்றினீர்கள்?**

ப: அந்த அரசாங்கங்கள் ஊழல் அரசாங்கங்களாக இருக்கலாம். ஆனால் நான் அப்படியல்ல. நான் விவசாயப் பிரதியமைச்சுப் பதவியைக் கூட சிலமாதங்கள் தான் வகித்தேன். ஏனைய அரசியல்வாதிகள் போல நாடாளுமன்றம் சென்று வெ ,மனே உணர்ச்சி பொங்கப் பேசிவிட்டு வாளாவிருக்க நான் அரசியலுக்கு வரவில்லை. அவர்களைப்போல இருந்திருந்தால் நானும் அரசாங்கங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அறிக்கைகளை விட்டுக்கொண்டு இருந்திருக்கலாம். ஆனால் மக்களுக்கு என்னால் என்னென்ன நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கமுடியுமென்றுதான் நான் யோசித்தேன். அதனால்தான் அந்த அரசாங்கங்களோடு இணைந்து பணியாற்றவேண்டி வந்தது. எனவே மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்பதற்காக அரசாங்கத்துக்கு ஆதரவாக நான் செயற்படவேண்டியிருந்ததே தவிர, அவற்றின் ஊழல்களுக்கு நான் பொறுப்பாளியாகமுடியாது.

**கே: கடந்த தேர்தலில் நீங்கள் ஒரு தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டபோதும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, என் கனவு யாழ் என்ற ஆசையூட்டியதாலேயே அதிகளவு இளையோர் உங்கள் பின்னால் திரண்டு, உங்களை வெற்றி பெறவும் செய்தார்கள் . ஆனால் அந்த வாக்குறுதிகளை நீங்கள் நிறைவேற்றாததால் இளையோர் பலரும் உங்கள் மீது அதிருப்தியில் உள்ளனர் என்று சொல்லப்படுகின்றதே?**

ப: அப்படியல்ல. இது உங்களைப் போன்ற ஊடகங்களும், சில ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களும் திட்டமிட்டு உருவாக்கிய பொய்யான கருத்துருவாக்கம். என் கனவு யாழ் என்பது எமது யாழ்ப்பாணத்தை மக்களும், நானும் இணைந்து நாங்கள் எல்லோரும் வாழ்வதற்கு உகந்த மாவட்டமாக வளர்ச்சியுற வைப்பதுதான். 2020 செப்ரெம்பர் முதல் 2022 ஏப்ரல் வரையே இந்தத் திட்டத்துக்காக நான் 45,000 லட்சம் ரூபாவை யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திக்காகக்

**மாற்றத்துக்கான அலையென்று சொல்லப்படுவது கட்டமைப்பு மாற்றத்தைத் தான். அந்தக் கட்டமைப்பு மாற்றமாக மக்கள் கோருவது காலம் காலமாக ஊழல் செய்துகொண்டு, மக்களுக்கான வேலைகளைச் செய்யாமல் இருப்பவர்களை மாற்றவேண்டும் என்றுதான். நான் அப்படி ஊழல்வாதியுமல்ல, மக்களுக்கான பணியைச் செய்யாதிருப்பவனும் அல்ல. நான் தொடர்ச்சியாக மக்கள் பணி செய்து வருகின்றேன்.**

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “அரசாங்கங்களின் ஊழலுக்கு நான் பொறுப்பாளியல்ல”

கொண்டுவந்தேன். அதேவேளை கொரோனாத்தாக்கம், பொருளாதார நெருக்கடி என்பன காரணமாக நிதிச்சிக்கல் காரணமாக அரசசேவைக்கு புதியவர்களை உள்ளீர்ப்பதில்லை என்ற கொள்கை முடிவை அரசாங்கம் எடுக்கவேண்டிவந்தது. அதனாலேயே எமது பகுதியைச் சேர்ந்த பலருக்கு என்னால் வேலைவாய்ப்பை உறுதியளித்தபடி வழங்கமுடியாமல் போயிருந்தது. இருப்பினும் கணிசமானோருக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்கவே செய்தேன். அதைவிட என்னுடைய செலவில 'மைட்ரீம்' என்ற கற்கைநிலையத்தில் சுமார் 5 ஆயிரம் இளைஞர்களுக்கு கணினிக்கற்கைகளை வழங்கிக்கொண்டிருக்கிறேன். அந்தக் கற்கையை முடித்தவர்களுக்கு வெளிநாட்டில் உள்ள நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவுமுள்ளேன். எனவே இந்தமுறையும் எனக்காக எல்லா இடங்களிலும் இளைஞர்களே களத்தில் இறங்கிப் பணிபுரிகின்றார்கள். அதனால் என்னோடு இளைஞர்கள் இல்லையென்று சொல்வதும், மக்கள் ஆதரவு குறைந்துவிட்டது என்பதும் தவறான கருத்து.

**கே: உங்களைப் போல வேறு சில அரசியல்வாதிகளும் அரசோடு இணைந்து நின்று, அபிவிருத்திச் செயற்பாடுகளை இங்கே முன்னெடுக்கத்தானே செய்கின்றனர். அவர்களிடமிருந்து நீங்கள் எவ்விதம் வேறுபடுவதாக நினைக்கிறீர்கள்?**

ப: நான் யாழ்.மாவட்டத்தில் உள்ள 435 கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள மக்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்திருக்கிறேன். ஒவ்வொரு கிராமத்துக்கும் தேவையான அடிப்படைக்கட்டமைப்புகள் எல்லாவற்றையும் ஏற்படுத்திக்கொடுத்துள்ளேன். நாம் வாழக்கூடிய ஏதுநிலை இருந்தால் தான் மக்கள் தொடர்ந்தும் இங்கேயே இருப்பார்கள். இல்லாவிட்டால் அவர்கள் புலம்பெயர்ந்து சென்றுவிடும் அபாயம் இருக்கிறது. அப்படிஅவர்கள் புலம்பெயர்வதால்தான், யாழ். தேர்தல் மாவட்டத்தில் 9 ஆக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை கூட இப்போது 6 ஆக சுருங்கிவிட்டது. இப்படியே மக்கள் புலம்பெயர்வார்களாயின் இறுதியில் இங்கே தமிழர்களே இல்லாமல் போய்விடும் அபாயமும் உண்டு. எனவே அந்த மக்களை வசதியாக, எல்லாவளமும் கிடைக்கக்கூடியவகையில் வாழவைத்தால் அவர்களின் இருப்பு நிலையானதாக இருக்கும். மக்களின் அந்த இருப்பியலுக்காகவே நான் போராடுகின்றேன். அதுவே என் வழி. மற்றைய அரசியல்வாதிகளும் என்னுடன் இணைந்தால், நிச்சயமாக எங்கள் மக்களை எங்கள் மண்ணில் நிலைத்து நிற்கச்செய்து, நிம்மதியாக வாழவைக்கும் சூழலை உருவாக்க முடியும்.

**கே: தமிழ்மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் சில கசப்பான சம்பவங்கள் தொடர்கின்றன. குருந்தூர்மலை,வெடுக்குநாறிமலை, காணிகள் சுவீகரிப்பு போன்ற பிரச்சினைகளின் போது மக்களின் சார்பான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் தமிழ் மக்களின் இருப்பியலுக்காக போராடுவதாகச் சொல்லும் நீங்கள், அந்தப் போராட்டங்களில் கலந்து கொள்வதில்லையே?**

ப: நீங்கள் சொல்வது வெளியிலிருந்து வரும் ஆக்கிரமிப்பு. ஆனால் எங்கள் வாழ்வியல் இருப்பே இல்லாமல் போவதைத்தானே முதலில் தடுக்கவேண்டும். அந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக அவர்கள் போராடட்டும். ஆனால் மக்களின் இருப்பைத் தக்க வைக்க அவர்கள் குரல் கொடுத்ததில்லையே. அந்தவேலையைத்தான் , மக்களின் இருப்பைத் தக்கவைப்பதையே நான் செய்துகொண்டிருக்கிறேன். இந்த மண்ணில் மக்களே இல்லாமல் போன பின்னர் வெளியில் இருந்து ஆக்கிரமிப்பு வந்தாலென்ன, வராவிட்டால் என்ன? முதலில் எங்கள் சொந்தமண்ணில் மக்கள் நிரந்தமாக வாழும் வழிகளை உருவாக்குவதே அவசியம். அதன் பின்னர் மற்றைய விடயங்களை எதிர்கொள்ளலாம்.

**கே: கடந்த சில தேர்தல்களில் ஒரே சின்னம் போல தோற்றமளிக்கும் வேறு சின்னங்களுக்கு வாக்களிக்கும் போக்கு யாழ்.மாவட்டத்தில் இருக்கின்றது. அன்னமென நினைத்து கழுகுக்கும், தொலைபேசி என நினைத்து கல்குலேட்டருக்கும் வாக்களித்தவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள். அதனை மனதில் வைத்துத்தான் தமிழ் மக்களின் ஆதரவுள்ள வீட்டுச்சின்னத்தையொத்த வடிவிலான தபால்பெட்டிச் சின்னத்தில் நீங்கள் போட்டியிடுகின்றீர்கள் எனச் சொல்லப்படுகின்றதே?**

ப: நீங்கள் அப்படிச் சொல்கிறீர்கள். ஆனால் மக்களோ வேறுவிதமாகச் சொல்கிறார்கள். இன்றைய அரசியல் சூழ்நிலையில் மக்களிடையே தமிழரசுக் கட்சியின் கடந்தகால நடவடிக்கைகள் பெரும் வெறுப்பை உண்டாக்கிவிட்டன. அதனால் அந்தக் கட்சி ஓர்ஆசனத்தைப் பெறுவது கூட சந்தேகமாக மாறிவிட்டது. அதேநேரம் எமக்கான ஆதரவு பெருகி வருகின்றது. இப்போது எமக்குள்ள கவலை என்னவென்றால், மக்கள் எங்கள் சின்னமான தபால்பெட்டிச் சின்னமென்று நினைத்து தவறுதலாக வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து விடக்கூடாதே என்பது தான்.

# காலத்தால் அழியாது ஐங்கரனின் நினைவுகள்

## நீத்தார் நயப்புரை




நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1990 காலப் பகுதியில் காரைநகர் மக்கள் உடுத்த உடுப்புடன் மட்டும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வலிகாமம் பகுதிக்கு இடம்பெயர்ந்திருந்தனர். அகில இலங்கை ரீதியில் பிரபல்யம் மிக்க பாடசாலையான காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியும் இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசாமி ஆலயத்துக்கு அருகில் கல்யாண மண்டபத்துக்காக கட்டப்பட்டு பூர்த்தியாக்கப்படாத நிலையில் இருந்த கட்டடம் ஒன்றில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இயங்கிக் கொண்டு இருந்தது. ஆனால் பௌதிக மற்றும் ஆளணி வசதிகள் மிகவும் குறைவாக இருந்தமையால் பாடசாலைச் சமூகம் பல கடினமான சவால்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. இந்நிலையில் க.பொ.த. உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்த மாணவன் ஒருவன் பாடசாலை சிறப்பாக இயங்கவேண்டும் என்பதற்காக பாடசாலை அலுவலகச் செயற்பாடுகளுக்கு மிகுந்த ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டு இருந்தார். பாடசாலையில் அன்று இயல்பான புன்முறுவல் உடன் சுறுசுறுப்பாக இயங்கிய அந்த மாணவனே பிற்காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக சமுர்த்தி உதவி முகாமையாளராக கடமையாற்றி அண்மையில் வீதி விபத்தில் அகாலமரணம் அடைந்த லயன் பத்மநாதன் ஐங்கரன் ஆவார். அமரர் ஐங்கரன் காரைநகர் பிரதேசத்தில் உள்ள தங்கோடை என்ற கிராமத்தைச் சேர்ந்த பத்மநாதன் கமலாம்பிகை தம்பதிகளின் மகனாக 1974ஆம் ஆண்டு யூலை மாதம் 28ஆம் திகதி பிறந்தார். தமது ஆரம்ப இடைநிலை இளமைக்கல்வியை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியிலேயே பயின்றார். பின்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டு வருட ஊடக டிப்ளோமா கற்கைநெறியை 2008 2009 காலப் பகுதியில் நிறைவு செய்தார். அத்துடன் சென்னை பல்கலைக்கழகம், 'சீ ' தமிழ் தொலைக்காட்சி 'தீக்கதிர்' நாளிதழ் ஆகியவற்றின் ஊடக வெளிகளப் பயிற்சியை மேற்கொண்டார்.

'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பது போல அன்று மாணவப் பருவத்திலேயே ஐங்கரனின் தலைமைத்துவப் பண்புகள் கண்டு அவருக்கு கற்பித்த ஆசிரியர்களாகிய நாங்களே ஆச்சரியம் அடைந்த சில சம்பவங்கள் மறக்கமுடியாதவை. ஒரு முறை பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த போது விளையாட்டு நிகழ்வு ஒன்றில் விளையாட்டு மத்தியஸ்தத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக வேறுபட்ட இல்லங்களைச் சேர்ந்த மாணவர்கள் இடையே சிறு குழப்பநிலை உருவானது. அப்போது மாணவன் ஐங்கரன் இரு தரப்பு மாணவர்களுடன் சுமூகமாக கதைத்து பிரச்சினையை சமரச நிலைக்குக் கொண்டு வந்தார். சிரேஷ்ட மாணவ தலைவனாக இருந்த ஐங்கரன் மாணவர்களை எவ்வாறு சமாதானப்படுத்தினார் என்பது காரைநகர் வாரிவளவில் எழுந்தருளியிருக்கும் எல்லாம் வல்ல கற்பக விநாயகர் ஆகிய அந்த ஐங்கரனுக்குத் தான் வெளிச்சம். ஐங்கரன் தான் பெற்ற ஊடக அறிவாற்றல் முறை மூலம் இடம்பெயர்ந்த [illegible] உலகிற்கு வெளிப்படுத்துவதில் வெற்றி கண்டார். சுவிஸ் நாட்டில் காரை ஆதித்தியனை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த காலாண்டு சஞ்சிகையில் ஐங்கரன் எழுதிய 'காரை நகரும் குடி நீர்ப்பிரச்சினையும்' என்ற தலைப்பிலான கட்டுரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. தொடர்ச்சியாக பல்வேறு இடம்பெயர்வுகள் காரணமாக தந்தையார் பார்வைப்புலனை இழந்தமை காரணமாக மிக இளம் வயதிலேயே குடும்பப் பொறுப்பேற்ற ஐங்கரன் பல்வேறுபட்ட பிரதேச செயலகங்களில் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றியபோது வறிய மக்களுக்கு உதவி செய்வதற்கு துணை நின்றார். எல்லோருடனும் எளிமையாகப் பழகும் பண்பு மிக்க அவர் காரை நலன் புரி சங்கம், காரை அபிவிருத்திச்சபை, லயன்ஸ் கழகம் போன்ற சமூகத் தொண்டர் நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளை வகித்து பல்வேறு சமூக சேவைகளை ஆற்றியுள்ளார். சமூகசேவகன் ஐங்கரன், தமது ஐம்பதாவது வயதில் காரைநகர் வாரிவளவில் எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயகர் ஆகிய எல்லாம் வல்ல ஐங்கரனின் திருவடிகளை 21.08.2024 இல் சரணடைந்துவிட்டார்.

**சுப்பிரமணியம் சிவநேசராசன்**
*முன்னாள் இரசாயனவியல் ஆசிரியர்,*
*யா / காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்வாணன்



# ஈழத்தில் துளிர்விடும் புதிய ஓவியச்செடி

## ஓவியக் கலைஞர் சி.சந்திரநேமி

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் சுன்னாகம் பொதுநூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக சுன்னாகம் பிரதேசத்தைச் சேர்ந்த ஓவியக் கலைஞரான சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றும் சி.சந்திரநேமியின் ஓவியக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை சுன்னாகம் பொதுநூலகத்தில் நடைபெற்றது.

நேமியின் ஓவியங்கள் தத்ரூப ஓவியங்களாகவும், கோட்டோவியங்களாகவும் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. அத்துடன் வெள்ளி புடைப்பு வேலைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கிடுகு வண்டில், வைக்கோல் வண்டி, தென்னம்பொச்சு வண்டி, மண்ணெண்ணெய் வண்டி, மரத்தடி ஆலயம், தட்டிவான், பழைய கார்கள், ஆலயங்கள், தொழிலாளர்கள் என பல தத்ரூப ஓவியங்கள் எமது அழகிய பழைய வாழ்வின் அம்சங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் கோட்டோவியங்களாக போரின் விளைவுகளும், கிராமத்து வாழ்வும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஓவியங்களில் இழப்பின் வலியையும், வாழ்வின் சோகத்தையும், பழைய நினைவுகளின் கழிவிரக்கத்தையும் ஓவியர் நேமி பார்வையாளர் மனங்களில் பதிய வைத்துள்ளார்.

நூற்றுக்கு மேற்பட்ட இவரது சொந்த ஆக்கங்களுடன் இவரது உறவினர்களான சிறுவர்களின் ஆக்கங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை சிறப்பானதாகும். இது இவரது முதலாவது ஓவியக் கண்காட்சியாகும். சுன்னாகம் பொது நூலகம் ஈழத்துக்குப் புதிய ஓவியரை அறிமுகம் செய்து வைத்திருக்கிறது.

# நவீன யுகத்தினை வெற்றிகொள்ள நிறைவுகாணும் மனநிலை

பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)



நம் ஒவ்வொருவரினதும், ஆசைகள், வேறுபட்ட தேவைகள், இலக்குகள், வெற்றிகள் போன்றன எமது சிறுபராயம் முதல் இப்போது வரை மாற்றம் அடைந்து வந்திருக்கின்றன. இந்த நிலையில் நிறைவு காணும் எண்ணம் எங்கள் வெற்றிக்கு அவசியம்தானா? என்ற கேள்வியோடு இந்தப் பகுதி நகர்ந்து செல்கிறது. நிறைவு என்றால் என்ன? உண்மையில் நாம் நினைத்த அனைத்தையும் அடைந்து விட்டோமோ? இல்லை என்றால் எப்படி மன நிறைவுடன் நாங்கள் வாழமுடியும்? எனக்கு நூறு ரூபாய்க்குப் பதிலாக ஐம்பது ரூபாய் கிடைத்தால் மிகுதிப் பணத்தை நினைத்து கவலைப்படுவதை விட ஐம்பது ரூபாய் கிடைத்துவிட்டது என்ற மன நிறைவையும், நன்றியையும் செலுத்தும்போது மிகுதிப் பணமும் ஏதோவொரு வகையில் எமக்கு கிடைத்துவிடுவதை உணர்ந்துகொள்ளமுடிகிறது.

இதனை எங்கள் வாழ்க்கையோடு பொருத்திப்பார்த்தால் அதன் தன்மை புலப்படும். சிறிய, சிறிய வெற்றிகளில் மகிழ்ச்சியடைந்து, மன நிறைவுடன், நன்றியுடன் பயணிப்பது அடுத்த மாபெரும் வெற்றிக்கு எங்களை அழைத்துச் செல்லும். உலகில் பல்வேறு நாடுகளை ஆட்சிசெய்தவர் மகா அலெக்சாண்டார். தன்னுடைய கனவு, உலகத்தை முழுமையாக தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவேண்டும், உலகத்தின் அரசனாகத் தான் திகழவேண்டும் என்பதை எண்ணி, அதற்கு ஏற்றால் போல் செயற்பட்டார். இறுதியில் அவர் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தருவாயில் அவர் கூறிய வார்த்தைகள், "இவ்வளவு சொத்து, செல்வம். நாடு எல்லாவற்றையும் அடைந்திருந்தும் இறந்தால் எல்லாம் வெறுமைதானே". தான் கைப்பற்றிய நாடுகளில் அமைதியோடு, நிறைவாக வாழ்ந்திருக்கமுடியும். ஏனெனில் இவ்வுலகம் மாபெரும் சக்திவாய்ந்தது என்பதனை அவர் உணர்ந்திருந்தால் அவை சாத்தியமாகியிருக்கும். எங்களுடைய மனநிலையின் தன்மை, எங்களுடைய வாழ்க்கையில் கிடைக்கும் ஒவ்வொன்றையும் எவ்வாறு பார்க்கின்றோம் என்ற மனநிலையில் கவனமாக நாம் இருக்கவேண்டும். நாம் மாணவர்களாக இருந்தாலும், வியாபாரத் துறையிலோ, வேலையில் பணியாற்றுபவர்களாகவோ, முயற்சியாளர்களாக இருந்தாலும் இந்த விதியினை பயன்படுத்துவது வெற்றியின் உச்சத்திற்குக் கொண்டுபோய் சேர்க்கும் என்பது தான் இயற்கை நியதியும் ஆகும்.

"அதிகமான சொத்துகள் மூலம் செல்வந்தராகிவிட முடியாது. மாறாக ஆத்மதிருப்தியே உண்மையான சொத்தாகும்." (திருக்குர் ஆன் ) உலகில் சனத்தொகையில் ஒரு குறிப்பிட்ட சில எண்ணிக்கையான மக்கள் வெற்றியடைந்து இருப்பதற்கும் அமைதியோடு இருப்பதற்கும், பெரும்பான்மையான மக்கள் துன்பத்தில் துவண்டு கொண்டு இருப்பதற்கும், அவர்கள் தொடர்ச்சியாக ஏழ்மை, தோல்வியை தங்கள் சொந்தமாக அரவணைத்துக் கொண்டிருப்பதற்கும், மற்றவர்களுக்கு மனக்கவலையினால் உதவி செய்யாமல் இருப்பதற்கும், எப்போதும் நெருக்கடிக்குள் வாழுவதற்கும் எது காரணமாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? போதாது என்ற மனமே என்பதுதான் என்று கூறிக்கொள்வதில் தப்பு இருந்துவிடப்போகிறது எனக் கருதவில்லை.

எமக்குக் கிடைக்கின்ற சிறிய, சிறிய வெற்றிகளை, மகிழ்ச்சியை நாம் கொண்டாடவேண்டும். அப்போது தான் இயற்கையும் எமக்கு பலவற்றை கொடுப்பதற்காகத் தன்னைச் செயற்படுத்தும் என்ற பேருண்மையோடு எப்போதும், எதிலும் நிறைவு மற்றும் நன்றி உணர்வோடு பயணப்படலாம்.

'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'

## சுயநல தேசத்தில்...!

உள்ளூர் உற்பத்திகள்
உதறி ஒதுக்கப்படும்!
நாறும் கழிவுகள்
நடுவீதி வந்து சேரும்!
நஞ்சேறிய மரக்கறிகள்
மனமறிய விலையாகும்!
கோடரிக் காம்புகளோ
போதைப் பொருள் பரப்பும்!
மதுபானச் சாலைகளோ
மாங்கல்யம் தினம் அறுக்கும்!
போலித் தலைவர் பின்
காலிகள் பல திரியும்!
வாசிக சாலைகளோ
பாழடைந்து போயிருக்கும்!
சொந்த மதம் மீது
வந்த மதம் சவாரி விடும்!
ஆறு மணிச் சட்டகத்தில்
ஆசான்கள் மாறப்படும்!

அரைத்த மா அரைக்கும்
காளான்களாய் கல்வியகம்!
அள்ளி இறைக்கின்ற
ஆலய மகோற்சவங்கள்!
இப்படி... இப்படியே...
இன்னும் எத்தனையோ..!

இரா.ஜெயக்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## யேசுரட்ணம் நேசம் விக்ரோறியா

**(தென்னிந்தியா - வேம்பார், யாழ்ப்பாணம் ரவிதா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)**

தென்னிந்தியா வேம்பாரை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யேசுரட்ணம் நேசம் விக்ரோறியா நேற்றுமுன்தினம் (04.11.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யேசுரட்ணம் விக்ரோறியா - றோசம்மாள் குருஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யேவதி விக்ரோறியாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தொசாறி விக்ரோறியா மற்றும் மனோகரி, லிசியராணி, மனோகரன் விக்ரோறியா, அன்ரன், நவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரஞ்சித், ரவிதா, யூட்டினா, லேஜினா, கமில்ரன், அஜேந்தினி, றொசானி, ஒக்ஷியா, அனோசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.11.2024) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் 178, பிங்கறிங்ஸ் றோட் கொழும்பு - 13 இல் உள்ள அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக மாதம்பிட்டி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்:**
**மனோகரன் விக்ரோறியா (தம்பி)**
**072 227 7967 - ABC Metal**
**மகன் - கமல் - 077 327 0828**
**ரவிதா ஸ்ரோர்ஸ்**



தோற்றம் 28.09.1947 — மறைவு 04.11.2024

# மரண அறிவித்தல்

## திரு. சிதம்பரப்பிள்ளை நிற்சிங்கராசா



தோற்றம் 22.03.1953 — மறைவு 03.11.2024

மந்துவில் வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை நிற்சிங்கராசா 03.11.2024 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-தெய்வானை தம்பதியரின் மருமகனும், விமலராணியின் அன்புக் கணவரும், நந்தகுமாரி (ஆசிரியர்-யா/ மந்துவில் ஶ்ரீபாரதி வித்தியாலயம்), முகுந்தன், சயந்தன் (இலண்டன்), சத்தியா (ஆசிரியர்-யா/ மிருசுவில் றோ.க.த.க பாடசாலை), கீர்த்தனா (ஆசிரியர்-மன்/ பற்றிமா ம.ம.வி), தர்ஷன் (பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விநாயகமூர்த்தி, திருமலர், சிவயோகம், இராஜகுலசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), யோகமலர் (இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற றதீஸ் (RDA -கிளிநொச்சி), கவிதா, காயத்திரி (இலண்டன்), பிரகாஷ் (ஆசிரியர்-யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), பரதீபன் (ஆசிரியர்-யா/ மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), இந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் சுவர்ணிஜா, அபினாஸ், அக்சிகன், அக்ஸ்மிகா, ஆருசி (லண்டன்), அனிஷ் (லண்டன்), சேயானா, கேசிகன், பிரதீக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.11.2024) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சகாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கேலக்குள வீதி,
மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொடர்புகளுக்கு**
**பிள்ளைகள் { முகுந்தன்-077 725 8516**
**தர்சன்- 077 719 6405**

(CR 43614) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்தை காப்பதே இலக்கு!

## வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.6**

**தமிழ்த் தேசியத்தைக் கட்டிக் காப்பாற்ற வேண்டும் என்பதே எனது திண்ணம். தமிழ்த் தேசியத்தை அழிக்கும் செயற்பாடுகள் தமிழரசுக் கட்சிக்குள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாமலேயே அதிலிருந்து வெளியேறினேன்.**

-இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணியும் சுயேச்சைக்குழு 14 இல் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளருமான கே.வி.தவராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியத்தைக் கட்டிக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் தந்தை செல்வாவின் மறைவு நிகழ்வில் கொடிகள் கட்டியபோது எனக்கு ஏற்பட்டது. அந்த எண்ணத்தில் தமிழரசுக் கட்சியில் இணைந்தேன் 14 வருடங்கள் பயணித்தேன். பல்வேறு தவறுகளை தலைவருக்குச் சுட்டிக்காட்டினேன். ஆனால் எவையும் நிவர்த்தி செய்யப்படவில்லை . அதனாலேயே கட்சியிலிருந்து வெளியேறினேன்.

எனவே தமிழ் மக்கள் திரளாக தங்களுக்குரிய கூட்டு உரிமைகளை அனுபவிக்கும் ஓர் அரசியற் சூழலை உருவாக்கவேண்டும்- என்றார். (ச-27)

# அமைச்சுப் பதவிகளுக்கு விலைபோகும் தமிழரசு!

## சிறீகாந்தா சுட்டிக்காட்டு

வவுனியா, நவ.4

தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதில் ஆசனப் பற்றாக்குறை ஏற்படுமிடத்து தமிழ் அரசுக் கட்சி ஆதரவு கொடுத்து அமைச்சுப் பதவியைப் பெற முனையும். தமிழர்களுக்கு நடைமுறையில் தீர்வு வராதவரை இப்படியான செயற்பாட்டை தமிழர்கள் ஜீரணிக்க மாட்டார்கள்.

இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் ஜனார்த்தனனின் தேர்தல் பணிமனையை திறந்து வைத்து உரையாற்றுகையில் தமிழ்த் தேசியக் கட்சியின் என். சிறீகாந்தா தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்குள் நுழைந்துள்ள சிலர் எதிர்வரும் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்க ஆசனங்கள் பற்றாக்குறையாக இருந்தால் அவர்களுக்கு ஆதரவளிக்க தாம் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளனர்.

தமிழ் மக்கள் தமது சுயநல அடிப்படையில் சிங்கள அரசுகளுடன் சேர்ந்து செயற்பட்ட எந்த தமிழர்களையும் தமிழின உரிமைக் குரலோடு சம்பந்தப்படுத்தி பார்த்தது கிடையாது. தமிழர்களுக்கு நடைமுறையில் தீர்வு வராதவரை இப்படியான செயற்பாட்டை தமிழர்கள் ஜீரணிக்கமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ச-27)

# தீர்வு கோரி பிரதமரிடம் மனு!

முல்லைத்தீவு , நவ.6

இராணுவக் கட்டுப்பாட்டிலிலுள்ள காணிகளை விடுவித்துத் தருமாறும் காணாமற் போன தமது உறவுகளுக்கு நீதியைக் கோரியும் முல்லைத்தீவு மக்கள் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் ஹறிணி அமரசூரிய கலந்துகொண்ட போதே பிரதமரிடம் நீதிகோரிய மனு கையளிக்கப்பட்டது. (ச-19)

# பலமான கூட்டணியை நாடாளுமன்று அனுப்புக

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

கிளிநொச்சி , நவ.6

தமிழ் மக்கள் பலமான கூட்டணியொன்றை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஜனநாயக தமிழ்க் கூட்டணியின் வேட்பாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள கட்சியின் தேர்தல் அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி மீது இருந்த நம்பிக்கை படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலில் 113 ஆசனங்களை எடுக்காவிட்டால் இவர்கள் ஏனைய கட்சிகளிடமிருந்து ஆதரவு கோரும் நிலை ஏற்படலாம். அவ்வாறு ஆதரவு கோரும் போது ஊழல்வாதிகள் உள்வாங்கப்படலாம்.

தற்போதைய அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்கக் கூடாது. தமிழ் மக்கள் ஒரு பலம்மிக்க அமைப்பாக நாடாளுமன்றத்துக்கு பிரதிநிதிகளை அனுப்பவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-113)



தேசிய மக்கள் சக்தியின் மாபெரும் பரப்புரைக்கூட்டம் பிரதமர் ஹறிணி அமரசூரியவின் பங்குபற்றலுடன் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள், மத குருமார்கள், கட்சியின் ஆதரவாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (ச-25, 113)

# பெண்களின் பங்களிப்பு அரசியலில் அவசியம்!

## தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவிப்பு

வவுனியா, நவ.6

அரசியலில் பெண்களின் பங்களிப்பினை 50 வீதம் உறுதி செய்யவேண்டும். ஆயுதப் போராட்ட காலத்தில் கூட 50 சத வீத பெண்களின் பங்களிப்பு இருந்த நிலையில், அரசியலில் ஏன் இல்லாமல் போனது? இது மிக மனவேதனைக்குரிய விடயமாகும்.

- இவ்வாறு யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற சந்திப்பில் தமிழர்விடுதலைக்கூட்டணியில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கௌரி தெரிவித்துள்ளார்.

தமிழர் இருப்பும் பொருளாதார இருப்பும் என்பதே எமது பிரதான கொள்கையாக கொண்டு இந்த முறை தேர்தலில் போட்டியிடுகிறோம். தமிழர் இருப்பைத் தக்க வைக்க பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. எனவே தான் இரண்டையும் சேர்த்தே கொண்டு செல்ல வேண்டிய தேவையுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-20)

# அநுர அரசால் மாற்றமில்லை

## ஐ.தே.க. வேட்பாளர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி , நவ.6

அநுர அரசாங்கத்தால் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. பொய்யான வாக்குறுதிகள், பொய்யான வேஷங்களைக் கண்டு மக்கள் ஏமாறக்கூடாது.

- இவ்வாறு யாழ்.தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் டேவிட் நவரட்ணராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைக்கு முட்டை விலை , அரிசி விலை , தேங்காய் விலை என்பன கூடியுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவால் குறைக்கப்பட்ட விலைகள் தற்போது மீண்டும் அதிகரிக்க தொடங்கி விட்டன. மக்களின் அத்தியாவசிய பொருளான அரிசியின் விலையைக் கூட கட்டுப்படுத்த முடியவில்லை. அநுர அரசாங்கத்தால் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. பொய்யான வாக்குறுதிகள், பொய்யான வேஷங்களைக் கண்டு மக்கள் ஏமாறக் கூடாது- என்றார். (ச-20)

# தமிழரசுவின் காரைநகர் கிளை மாம்பழச் சின்னத்துக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், நவ.6

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைநகர் மூலக் கிளை, நாடாளுமன்றத் தேர்தலில் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக்குழு 14 க்கு ஆதரவு வழங்கவுள்ளதாக, காரைநகர் மூலக்கிளையின் தலைவரும், காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளருமான க.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் ஒரு ஜனநாயகமற்ற சூழல் நிலவுகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்ட ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் வெளியேறி இன்று வேறு ஒரு சின்னத்தில் போட்டியிடுகின்றன. இந்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு மேலும் பின்னடைவு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருப்புக்காகவே அரசுடன் தமிழரசு

## கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, நவ.6

வடக்கில் தமது கட்சிக்கான ஆதரவு வீழ்ச்சியடைந்து வருவதால் அரசாங்கத்துடன் இணைந்து அதனை தக்கவைத்துக்கொள்வதற்குரிய தேவைப்பாடு இலங்கை தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அடுத்தது சுமந்திரனுக்கும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் சிறந்த நட்பு உள்ளது. இருவரும் இணைந்து செயற்படக்கூடியவர்கள்.

1960 காலத்துக்கு பின்னர் அவர்கள் (தமிழரசுக் கட்சி) அரசாங்கத்தில் அங்கம் வகிக்காததால் வடக்கில் அவர்களுக்குரிய வாக்கு வங்கி வீழ்ச்சியடைந்து வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 2015 இல் 16 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. 2020 இல் அந்த எண்ணிக்கை 10 ஆகக் குறைந்தது. எனவே, அவர்களின் இருப்பு வீழ்ச்சியடைந்து வருகின்றது.

எனவே, அரசாங்க பலம்மூலம் அதனைத் தக்கவைத்துக்கொள்வதற்குரிய தேவைப்பாடு அவர்களுக்கு உள்ளது - என்றார். (ச-44)

# தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு கட்சிகளுடன் பேசத் தயார்

## பிரதமர் முல்லைத்தீவில் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.6**

**தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எல்லாக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தத் தயார் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களுடைய பணத்தை மக்களுக்காக பயன்படுத்துகின்ற அர்ப்பணிப்புமிக்க வேட்பாளர்களாக நாம் உள்ளோம். இதுநாள் வரைக்கும் நாடாளுமன்றத்தில் இருந்தவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. நீண்டகாலமாக நீடித்து வரும் தமிழ்மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க எல்லாக் கட்சிகளுடனும் பேச்சு நடத்த நாம் தயார். இந்த நாட்டில் இருக்கின்ற தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும்- என்றார். (ச-19)



# தேசியக் கொள்கையில் ஈ.பி.டி.பி. பயணிக்கும்

## டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.6

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியிடம் மட்டுமே கொள்கைகள் உள்ளன. தமிழ்த் தேசியத்தையும் முன்னெடுத்து செல்வது ஈழமக்கள் ஜனநாயக கட்சியினர் மாத்திரமே என அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நீண்டகால முயற்சியின் பயனாகவே காணி விடுவிப்புகள் இடம்பெற்று அண்மையில் பலாலி அச்சுவேலி வீதியும் திறக்கப்பட்டது. அண்மையில் புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை நேரில் சந்தித்தேன். அதன் போது வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் உள்ளிட்டவற்றின் ஆக்கிரமிப்புக்கள் தொடர்பில் சுட்டிக்காட்டினேன்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அப்போதே நடைமுறைப்படுத்தி இருந்தால், தமிழ் மக்கள் இழப்புக்களை சந்திக்க வேண்டி வந்திருக்காது.

தேசிய நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் முகமாகவே கொழும்பு, புத்தளம் உள்ளிட்ட மாவட்டங்களிலும் தேர்தலில் போட்டியிடுகிறோம்- என்றார். (ச-20)

# சொந்த நிலத்தில் வாழவைப்பதே தமிழ்த்தேசியம்

## மு. சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.6

தமிழ் மக்கள் சொந்த நிலத்தில் ஒருவர் வாழக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அதற்காக அரசியல் ரீதியாக உழைக்கவேண்டும். உண்மையில் அப்படிச் செய்வதே தேசியப் பணியாகும். அதுவே தமிழ்த்தேசியத்தின் உயிர்நாடியாகும்.

-இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் யாழ்., கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த காலத்தில் நீங்கள் தெளிவாகச் சிந்திக்க மறந்ததால்தான், அல்லது நம்பிக்கையின் அடிப்படையில் வாக்களித்தபடியால்தான் தவறானவர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்தது.

நாம் கடந்த காலத்தில் போரினால் அழிந்து போயிருந்த கிளிநொச்சியைக் கட்டியெழுப்பியிருக்கிறோம். மக்களின் மனதிலே நிலைத்திருக்கக் கூடிய பல பணிகளை ஆற்றியிருக்கிறோம்.

தமிழ்பேசும் சமூகங்களாக எமது உரிமைகளைக் கேட்கிறோம். இப்படி ஒன்றிணைந்து நின்று குரல் கொடுப்பதும் போராடுவதுமே இன்றைய சூழலில் வெற்றியைத் தரும்- என்றார். (ச-214)

# தேர்தல் கடமை செயலமர்வு

கிளிநொச்சி, நவ.6

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான முன்னாயத்தப் பணிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதன் ஓர் அங்கமாக கிளிநொச்சி மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்களின் வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது. இதன்போது தேர்தல் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பதில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அரவிந்தராஜாவால் விளக்கமளிக்கப்பட்டது. (ச-113)





# 1000 கிலோ பீடி இலைகள் மன்னாரில் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.6

மன்னார் கீரி கடற்கரைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது கடல் வழியாக கடத்தப்பட்ட ஆயிரத்து 287 கிலோ கிராம் எடை கொண்ட பீடி இலைகளைக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மேலதிக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் வரை பீடி இலைகள் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படையினரின் செய்திப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE ROYAL COLLEGE OF JAFFNA
தனியார் கல்வி நிறுவனம் சங்கானை
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில By. ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்.
குபேரன் கட்டடமாடி, சங்கானை ரவுண்
Tel. 077 675 1649
(CS29240) J-1

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை சவால் விடுகிறார் கம்மன்பில

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான அறிக்கைகள் தொடர்பில் முடிந்தால் தன்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு அமைச்சர் விஜித ஹேரத்துக்கு, பிவிருது ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில சவால் விடுத்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தச் சவாலை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புதிய ஆட்சியின்கீழ் பணம் அச்சிடப்படவில்லை எனவும், திறைசேரி முறி விவகாரம் குறித்து மாத்திரமே மத்தியவங்கி கடன் பெறுகிறது எனவும் அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார். இப்படி பல பொய்களை அவர் கூறுவதை நாம் சுட்டிக்காட்டும்போது அவற்றை மறைப்பதற்கு மற்றுமொரு பொய்யை சொல்லும் நிலை காணப்படுகின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான அறிக்கைகள் மற்றும் அரசாங்கம் கடன் வாங்கியமை தொடர்பில் என்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சவால் விடுக்கின்றேன். அரசாங்க ஊடகங்களை கட்டுப்படுத்துவதுபோல தனியார் ஊடகங்களையும் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது- என்றார். (எ-44)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## 2025 ஆம் ஆண்டிற்கான 1வது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடை கள், கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2025.01.01ஆம் திகதி தொடக்கம் 2025.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | - | 06.11.2024 – 18.11.2024 பி.ப 2.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி | - | 19.11.2024 பி.ப 2.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி | - | 19.11.2024 பி.ப 2.30 மணிக்கு |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | - | வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம். |

| தொ இ | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 294,000.00 | 250.00 |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 50.400.00 | 250.00 |
| 3 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 238,025.00 | 250.00 |
| 4 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 200,550.00 | 250.00 |
| 5 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 61,950.00 | |
| 6 | ஆலடிச்சந்தை | 750.00 | 7,500.00 | 112,000.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 290,850.00 | 250.00 |
| 2 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 57,475.00 | |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 346,500.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 38,475.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு மீன்சந்தை | 750.00 | 7,500.00 | 300,000.00 | |
| 4 | ஏழாலை மயிலங்காடு மரக்கறிச்சந்தை | 750.00 | 7,500.00 | 293,755.00 | |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2024.11.26ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. அரசினால் வரி விதிக்கப்படும் பட்சத்தில் அத்தொகையும் செலுத்தப்படவேண்டும்
5. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
6. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
7. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
8. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை **"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
10. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
11. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
14. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

**06.11.2024**

(cr.43610) (N-1)

# வெளிநாடு செல்லும் ரணில்

*கொழும்பு, நவ.6*

*நவம்பர் 14 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தகையோடு வெளிநாடு செல்வதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார். ஓய்வு நிமித்தமும், சில சர்வதேச கருத்தரங்குகளில் பங்கேற்பதற்காகவுமே அவர் தனது பாரியார் சகிதம் வெளிநாடு செல்லவுள்ளார். தேர்தல் முடிந்ததும் தான் வெளிநாடு செல்லவுள்ளதை ரணில் விக்கிரம சிங்கவும் உறுதிப்படுத்தியுள்ளார். அதே வேளை, சில சர்வதேச அமைப்புகளும் தமது அமைப்பில் பதவியேற்குமாறு ரணில் விக்கிரம சிங்கவுக்கு அழைப்பு விடுத்துள்ளன என்று தெரியவருகின்றது.* (எ-44)

# மரண அறிவித்தல்



## அந்தோணிப்பிள்ளை பிலோமினா

வெற்றிலைக்கேணியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோணிப்பிள்ளை பிலோமினா 04.11.2024 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான பாவிலுப்பிள்ளை மரியம்மாவின் அன்புப்புதல்வியும் அந்தோணிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைத்தியாம்பிள்ளை ஆரோக்கியம் அவர்களின் அன்பு மருமகளும், மேரி விமல்டா, மேரி மெற்றில்டா, ஜோர்ஜ் ஜெனிபேட் (டென்மார்க்), ஜெரூட் (ஜேர்மனி), அன்ரனி குமார்(பிரான்ஸ்), மேரி ஜெசில்டா, கிறிஸ்டி பேனாட் (அசோக்-ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயபாலசிங்கம், அனுசியா, சுதா, சுமணா, அருட்குமரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அருண், ஜெவிஷா, அருண்யா, யோசுவா, ஷெரான், ஜெரத், ஜெரமி, ஷமீனா, ஜொஷான் ஆகியோரின் அன்புப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு இன்று 06.11.2024 புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கோரியடி பொது மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 942 7836, 077 154 6208**
(CS 53350) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை உடைத்தது சலுகைக்கு விலைபோனோரே!

## சுமந்திரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.6**

**தமிழ் மக்களின் பலமான ஓர்அரசியல் சக்தியாக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்தது தமிழரசுக் கட்சி அல்ல, போனஸ் ஆசனங்கள் கிடைக்காமையினாலேயே பங்காளிக் கட்சிகள் ஒவ்வொன்றாக வெளியேறியிருந்தன- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் வடமராட்சியில் அண்மையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆசனப்பங்கீடு அல்லது போனஸ் ஆசனம் அல்லது தேசியப்பட்டியல் ஆசனம் என்பவை தமக்குக் கிடைக்கவில்லை என்பதால் தான் கூட்டமைப்பில் இருந்த கட்சிகள் பலவும் விலகிப் போயின.

இன்றைக்கு பல ஊடகங்களுக்கு இந்த சிறிய நுண்ணிய வித்தியாசங்கள் புரிவதில்லை. அவர்கள் தாமாகவே கட்சி முடிவு என்பது போல தமிழரசு தனிவழி செல்லத் தீர்மானம் என எழுதிவிட்டார்கள்.

ஒற்றுமை என்கிற ஏக்கம் எங்கள் மக்கள் மனங்களிலே இருக்கிறது. அது தவறான ஓர் ஏக்கம் அல்ல. நாங்கள் ஒன்றாக இருக்கவேண்டும்.

ஆனால் யாரோடு ஒன்றாக இருப்பது என்பதில் பெரிய கேள்வி இருக்கிறது.

தமிழ் மக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டியது மட்டுமல்ல நீங்கள் கொஞ்சம் துப்பறிந்து இது யார் யார் என்று கண்டுபிடித்து அவர்களை தமிழ் அரசியலில் இருந்த நீக்க வேண்டியது உங்களது பொறுப்பு. நாங்கள் ஒரு தேசம், நாங்கள் ஒரு மக்கள், எங்களுக்கென்று ஒரு பாரம்பரியம், பண்பாடு, அரசியல் உரித்து, சுயநிர்ணய உரிமை உண்டு என்று சொல்வதற்கு ஒரு அணியாக வடக்கு -கிழக்கில் இருந்து செல்லவேண்டும். வடக்கையும் கிழக்கையும் பிரித்தோருக்கு வடக்கும் கிழக்கும் இணைந்து நாங்கள் போய் காண்பிக்கவேண்டும். இலங்கை தமிழரசுக் கட்சியால் மட்டும் தான் இது முடியும் - என்றார்.

(ச-100)



# கோமாளியைப் போல மாறுகின்றார் அநுர!

## கூறுகின்றார் சஜித்

கொழும்பு, நவ.6

உகண்டாவில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வருவதாகக் கூறிய ஜனாதிபதி அநுரகுமார தற்போது மக்கள் மத்தியில் நகைச்சுவையாளராக மாறியுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவிசாவளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையிலிருந்து உகண்டாவுக்கு கொண்டு செல்லப்பட்ட ஊழல்வாதிகளின் பணத்தை தற்போதைய அரசாங்கம் மீட்டு வரும் என மக்கள் காத்திருக்கின்றனர்.

எனினும் பணத்தைப் பதுக்கி வைத்தவர்கள் அதில் நல்ல வட்டிகளை உழைத்து சுகபோகமாக உள்ளனர். ஆட்சிக்கு வந்ததிலிருந்து தேசிய மக்கள் சக்தி சிறந்த நகைச்சுவைகளைக் கூறிவருகிறது. மக்களை ஏமாற்றி ஒருபோதும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து, கடவுச்சீட்டு வரிசைக்குத் தீர்வு வழங்குவதற்குப் பதிலாக புதிய வரிசைகளை ஏற்படுத்தி வருகிறது. பொருள்கள் விலை மற்றும் வரி குறைப்புகளை மேற்கொள்ளவில்லை. சர்வதேச நாணயநிதியத்துடனான ஒப்பந்தத்தை மாற்றியமைப்பதாகக் கூறிய அநுர அரசாங்கம் இன்று அவர்களிடம் மண்டியிட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து சர்வதேச நாணயநிதியத்துடன் புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி மக்களுக்கு சிறந்த சலுகைகளைப் பெற்றுக் கொடுக்கும்-என்றார். (எ-இ)

# முல்லைத்தீவில் நடமாடும் சேவை

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் பொதுமக்களுக்கான நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது. முற்பகல் 10 மணி முதல் மாலை 4 மணி வரை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கு உரிய தீர்வுகளை விரைவாக வழங்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-66)


# INVITATION FOR BID
## PSDG - 2024
## THUNUKKAI PRADESHIYA SABHA - THUNUKKAI

1) The Chairman, Local Authority Procurement Committee on behalf of Thunukkai Pradeshiya Sabha, Northern Province invites sealed bids from eligible and qualified Bidders for the works described in the table below.

2) Bidding will be conducted through National competitive bidding procedure. However, according to the public finance circular no 04/2016(ii) dated 2019.05.08 regional preference and CIDA grade preference shall apply.

3) To be eligible for contract award the successful bidders shall not have been black listed and shall have been registered in the field of Road and Building for grade mentioned in the table below with the Institute for Construction Industry Development Authority (CIDA).

4) Qualification requirements are indicated in section 4 of the bidding document. Additional details are provided in the Section 5 of the bidding document.

5) Interested bidders may obtain further information from Chairman, Procurement committee, Thunukkai Pradeshiya Sabha,Thunukkai.(T.P No: 0212284532, Fax No: 0212283478) and inspect the bidding documents at the address given below from any working days 9.00 hrs to 15.00 hrs from 2024.11.06 till 2024.11.19

6) A complete set of Bid Documents in English language may be purchased by interested Bidders on the submission of a written application to the Thunukkai Pradeshiya Sabha,Thunukkai. From 2024.11.06 until 2024.11.19 from 09.00 hrs to 15.00 hrs. Upon payment of a non-refundable fee of Rs.3,000.00. The method of payment will be by cash.

7) Bids shall be delivered of Original and duplicate to the address Secretary, Thunukkai Pradeshiya Sabha,Thunukkai, on or before 14.00 hrs on 2024.11.20 Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend.

| S. No | Contract No | Description of Work | Source of Fund | Estimated Civil Cost (Million) | Contract Period | Required Grade | Required Bid Security | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Bid Validity Days | Bid Validity Period | Security amount | Security Validity Period |
| 01 | NP/14/44(05) /02/PSDG-03/2024 | CONSTRUCTION OF SLAUGHTER HOUSE AT DAMPING GROUND AT KALVILAN (STAGE I) | PSDG | 3.25 | 63 Days | C8 and C7 | 63Days | 2025.01.20 | 50,000.00 | 2025.02.17 |

Bid security is as following table

**Bid invitation table**

8) Pre-bid meeting will be held on **2024.11.13 at 11.00** Hrs in Thunukkai Pradeshiya Sabha,Thunukkai. Interested bidders may attend the pre bid meeting at their own expenses.

9) The procurement committee has the power to reject the bid as totally or partly and to call retender

**Chairman,**
**Local Authority Procurement Committee**
**Thunukkai Pradeshiya Sabha,Thunukkai.**
**2024.11.06**

(cr.43573) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

அச்செழு மேற்கு, நீர்வேலி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜகுமார் 'கனலரசி' ஆகிய நான் எனது பெயரை 'கர்மிகா' என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் 'கர்மிகா' என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கு அமைவாக மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

ராஜகுமார் கர்மிகா

(CS 29252) P-1

# ஊழலுக்கெதிரான சாட்டைக்குள் வடக்கு – கிழக்கு இல்லையா?

## சிவாஜிலிங்கம் கேள்வி

யாழ்ப்பாணம், நவ.6

ஊழலுக்கு எதிரான அரசு என ஆர்ப்பரிக்கும் அநுர அரசின் ஊழலுக்கு எதிரான சாட்டை வீச்சுக்குள் வடக்கு கிழக்கு இல்லையா? என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வேட்பாளரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் ஒற்றுமையை விரும்புகிறார்கள்.

தெற்கிலங்கையின் மாற்றம் என்ற மாயைக்குள் தமிழ் மக்கள் கரைந்து போகாது தமிழர் பிரதிநிதித்துவத்தை தமிழ்த் தேசிய தரப்புகளுக்கே இம்முறையும் வழங்கவேண்டும்.

ஊழலுக்கு எதிரானவர்கள் எனக் கூறி ஆட்சிக்கு வந்துள்ள அநுரகுமார திஸாநாயக்க அரசு தெற்கில் இடம்பெற்ற ஊழல் விடயங்களை கையில் எடுத்துள்ள அதே நேரம் வடக்கு - கிழக்கு பகுதிகளில் கண்டும் காணாதுள்ளது.

அதேவேளை தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண்பதற்கு சர்வதே தலையீட்டுடன் பொதுவாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் - என்றார். (ச-100)

# INVITATION FOR BID 2024/09

## Regional Directorate of Health Service Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

"Bidding will be conducted through National Competitive Bidding Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii).

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents.

5. Interested bidders may obtain further information from address given below in 7 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna. (T.P:0212214966, Fax: 0212229971) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of nonrefundable fees as mentioned in the table. The method of payment should be by cash.

7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the lefthand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

8. Pre- Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.

9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | From 06.11.2024 until 19.11.2024 |
|---|---|---|
| | PreBid Conference | At 2.30 P.M on 13.11.2024 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 20.11.2024 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non - Refundable Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2024/LM/W/06 | Ward No.07 Modifying as a Quarters at Base Hospital Chavakachcheri,Jaffna. | 6.08 | 111 Days | C7 and C6 (Buildings) | 3,500.00 | 61,000.00 | Till 05.03.2025 |
| NP/04/41/2024/LM/W/07 | Renovation of Old Clinic Complex at Base Hospital Chavakachcheri,Jaffna | 4.98 | 105 Days | C7 and C8 (Buildings) | 3,500.00 | 50,000.00 | Till 19.02.2025 |
| NP/04/41/2024/LM/W/08 | Renovation of the building for psychiatric treatment unit at Base Hospital, Chavakachchari, Jaffna | 2.97 | 75 Days | C7 and C8 (Buildings) | 1,500.00 | 30,000.00 | Till 19.02.2025 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**

# பாடசாலை மாணவர்களை விட்டுச்செல்லும் பேருந்துகள்!

யாழ்ப்பாணம், நவ.6

இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பேருந்துகள் எழுதுமட்டுவாழ் ஆசைப்பிள்ளை ஏற்றத்தில் பஸ்தரிப்பு நிலையத்தில் நிற்கும் மாணவர்களை ஏற்றாமல் செல்வதால் குறிப்பிட்ட நேரத்துக்கு பாடசாலைக்குச் செல்லமுடியாத நிலை ஏற்படுகிறது என்று பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பகுதிகளில் இருந்து வரும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் எழுதுமட்டுவாழ் ஆசைப்பிள்ளை ஏற்றத்தில் பஸ்தரிப்பு நிலையத்தில் நிற்கும் மாணவர்களை காலை வேளையில் ஏற்றாமல் செல்கின்றன. இதனால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன் நெருக்கடியையும் சந்திக்கின்றனர். எனவே குறித்த இடத்தில் பேருந்துகள் தரித்து நின்று மாணவர்களை ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை போக்குவரத்துச்சபையினர் மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர கொண்டுவரவுள்ள அரசமைப்பு ஆபத்தானது

## எச்சரிக்கையாக இருக்குமாறு கஜேந்திரகுமார் தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இனப்பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டுவரப்போவதாகச் சொல்கின்ற புதிய அரசமைப்பு மிகமிக ஆபத்தானது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலை முன்னிட்டு இணுவிலில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியாக அநுரகுமார பொறுப்பேற்ற பின்னர், இனப் பிரச்சினைக்குத் தீர்வாக புதியதொரு அரசமைப்புக் கொண்டுவரப்படும் என்று தெரிவித்துள்ளார். மைத்திரி - ரணில் ஆட்சிக்காலத்தில் நாடாளுமன்றத்தை ஓர் அரசமைப்புச் சபையாக மாற்றி புதியதொரு அரசமைப்பை உருவாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டதாகவும், அந்த முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து அரசமைப்பை உருவாக்குவேன் என்றும் அநுர தெரிவித்துள்ளார். ரணில் - மைத்திரியின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட அரசமைப்பு ஒற்றையாட்சியை அழுத்தமாக வலியுறுத்தும் வகையில்தான் அமைந்திருந்தது. ஆதலால், அந்த அரசமைப்புத் திட்டங்களை ஜனாதிபதி அநுர தொடர்ச்சியாக முன்னெடுக்கப் போகின்றார் என்றால், அவர் ஒற்றையாட்சி அரசமைப்பையே கொண்டுவரப் போகின்றார் என்று அர்த்தம். அந்த 'ஏக்கிய ராஜ்ஜிய' அரசமைப்பை தமிழர்களும், தமிழ்த் தலைவர்களும் ஏற்கக்கூடாது. மாறாக அந்த அரசமைப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டால், வரலாற்றில் முதல் தடவையாக தமிழர்கள் ஏற்ற அரசமைப்பு நடைமுறைக்கு வரும் என்பதோடு, பின்னர் எக்காலத்திலும் தமிழர்கள் இனப்பிரச்சினை தொடர்பில் பேச முடியாத சூழல் உருவாகும் - என்றார். (அ-ம-26)



# யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நீரிழிவு தொடர்பான உரையாடல்!

யாழ்., நவ. 6

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நீரிழிவு தொடர்பான விழிப்புணர் வுக் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றுள்ளது. உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நீரிழிவு சிகிச்சை நிலையமும், யாழ்ப்பாணம் நீரிழிவுக் கழகமும் இணைந்து யாழ். நீரிழிவு கழக செயலாளர் க.கணபதிபிள்ளை தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. மருத்துவ நிபுணர் டாக்ரர் ம.அரவிந்தன் அதிகரித்துவரும் நீரிழிவை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் நீரிழிவால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக உரையாற்றினார். (ம)

### அரச...

பதி அநுரகுமாரவுக்கும் இடையிலான கலந்துரையாடல், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே, அரச சேவைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-

"எதிர்வரும் ஐந்து வருடங்களில் கிராமிய மக்களின் வறுமையை இல்லாதொழித்து கிராமிய மக்களின் பொருளாதாரம் மற்றும் சமூக அந்தஸ்தை உயர்த்துவது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும். அரசாங்கத்தின் இந்த வேலைத்திட்டம் வெற்றியடைவதற்கு அரச அதிகாரிகளின் ஆதரவு மிகவும் அவசியமானது. ஆனால் அரசாங்கத்தின் நோக்கத்துக்கும், அரச சேவைகள் இடம்பெறும் விதத்துக்கும் இடையில் சில இடைவெளிகள் காணப்படுகின்றன. அரச நிர்வாகம் இதுவரை செயற்பட்ட விதத்தில் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

நாட்டில் மோசடி மற்றும் ஊழலை நிறுத்துவது அரசாங்கத்தின் முதன்மையான பணியாகக் காணப்படுகின்றது. அந்த இலக்கை நோக்கித் தொடர்ந்து பயணிப்போம். அத்துடன், அரச சேவையில் அரசியல் ரீதியிலான தலையீடுகள் மேற்கொள்ளப்படமாட்டாது. அரச உத்தியோகத்தர்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது" - என்றார். (அ-ம)

### இலங்கைத்...

கோரிக்கையாளர்கள் கடந்த மூன்று வருடங்களாக டியாகோ கார்சியாவின் தற்காலிக கூடாரங்களில் வசித்து வருகின்றனர். இவர்கள் அங்கு புகலிடக் கோரிக்கைக்குப் பதிவுசெய்துள்ளனர். எனினும், இதற்கு முன்னர் இருந்த கன்சர்வேடிவ் அரசாங்கம் குடியேற்றங்களுக்கு எதிரான கொள்கைகளை இறுக்கி அவர்களைப் பிரிட்டனுக்குள் அனுமதிக்க மறுத்து வந்தது. தற்போது ஆட்சிப்பீடம் ஏறியுள்ள தொழிலாளர் கட்சி அரசாங்கம், அந்தத் தமிழ் அகதிகளைப் பிரிட்டனுக்குள் அழைக்கத் தீர்மானித்துள்ளது. தொழிலாளர் கட்சியின் தலைவரும், பிரதமருமான கீர் ஸ்டார்மர் மேற்கொண்ட கொள்கை மாற்ற நடைமுறைகளாலேயே, அந்த அகதிகள் பிரிட்டனுக்குள் அழைக்கப்படவுள்ளனர்.

டியாகோகார்சியா எப்போதும் புலம்பெயர்ந்தவர்களுக்கு நீண்ட காலத்திற்குரிய இடமாக விளங்கியதில்லை. எனவே, அங்குள்ளவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியது அவசியம் என்று பிரிட்டன் பிரதமர் அலுவலகத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் அரசாங்கத்தின் இந்த அறிவிப்பை தாம் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை என்றும், இது கனவுபோல உள்ளதாகவும் டியாகோகார்சியாவில் தங்கியுள்ள தமிழ் அகதிகள் சர்வதேச ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர். (அ-ம)

### அரகலய...

அரகலயவிலும் அவர்களின் பங்களிப்பு இருந்தது. 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிடும் நிலைப்பாட்டில் மஹிந்த ராஜபக்ச இருக்கவில்லை.

எனினும், கட்சியின் அழைப்பின் பிரகாரமே அவர் போட்டியிட்டார். இம்முறை போட்டியிடமாட்டார் என்ற முடிவிலேயே மஹிந்த ராஜபக்ச ஆரம்பம் முதலே இருந்தார்.

இம்முறை தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் களமிறங்கும் முடிவில் நான் இருந்தேன். கட்சி விடுத்த கோரிக்கையால், நாடு முழுவதும் கட்சி உறுப்பினர்களுக்காக பிரசாரம் செய்ய வேண்டியுள்ளதால் தேசியப் பட்டியலில் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ராஜபக்சக்களின் அரசியல் பயணத்துக்கு முடிவுகட்டுவதற்கு 2009ஆம் ஆண்டிலிருந்தே பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ராஜபக்சக்களின் அரசியலை வீழ்த்துவதற்கு புலம்பெயர் புலிகள் கடுமையாக முயற்சித்து வருகின்றனர். அரகலயவிலும் அவர்களின் பங்களிப்பு இருந்துள்ளது. அரகலயவில் உண்மையான போராட்டக் காரர்களும் இருந்தனர். ஆனால் ஓர் அங்கமாக சூழ்ச்சித் திட்டமும் இருந்தது - என்றார். (அ-ம-44)

### முறைப்பாடு...

தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 386 முறைப்பாடுகளும், மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு ஆயிரத்து 206 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்துடன் 15 தேர்தல் வன்முறைகளும் இடம்பெற்றுள்ளன. (அ-ம)

### காய்ச்சல்...

நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### தமிழர்களின்...

சமூகங்களையும் பாதித்தது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மாநாடு ஒன்று மன்னாரில் நேற்று இடம்பெற்றுள்ளது. அங்கு உரையாற்றும் போதே, 'தேசிய மாற்றம்' என்ற போர்வைக்குள் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை அழிப்பதற்கு சதித்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ரிஷாத் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தி வென்றுவிட்டது என்பதற்காக, முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை இல்லாதொழிக்க விரும்புகின்றீர்களா? நாடாளுமன்ற அரசியலில், இனக் குழுக்களுக்கு என்று தனித்தனி பிரதிநிதித்துவங்கள் அவசியம். தேசிய அரசியலில் மாற்றம் ஏற்பட்டுள்ளமைக்காக, சமூகங்களின் பிரதிநிதித்துவங்களை இல்லாமற் செய்ய இயலாது.

எங்கள் மத்தியில் உள்ள சிலர் இவ்வாறான வேலைகளைச் செய்வதற்குத் துணிந்துள்ளனர். இந்த சதிகளுக்குத் துணைபோயுள்ள எமது சகோதரர்களுக்கு வழிகாட்டவேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது.

பிரதிநிதித்துவங்கள் இல்லாத சமூகங்கள், திசை தவறும் ஆபத்துகளை எதிர்கொள்ளலாம். முறையான தலைமைத்துவங்கள் இருந்தபோதும், உணர்ச்சி, எழுச்சிகள் ஏற்பட்டதால், தமிழ் இளைஞர்கள் தவறான வழி சென்ற வரலாறு நமது நாட்டில் உள்ளது. இதனால், ஏற்பட்ட யுத்தம் சகல சமூகங்களையுமே பாதித்திருந்தன. இதுபோன்ற எழுச்சியை, இப்போது ஏற்பட்டுள்ள மாற்றமும் ஏற்படுத்துமோ என நாங்கள் அஞ்சுகின்றோம் - என்றார். (அ-ம)

### சந்திரிகாவை...

ஜனாதிபதியாக அநுரகுமார பொறுப்பேற்ற பின்னர் மேற்கொள்ளப்பட்ட அதிரடியான அறிவிப்புகளில், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக் குறைப்பும் அமைந்திருந்தது. இவ்வாறாகத் தனது பாதுகாப்புக் குறைக்கப்பட்டமையாலேயே தான் கொல்லப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக சந்திரிகா தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரட்ணவுக்கு இந்த விடயம் தொடர்பில் சந்திரிகா கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்திலேயே, தனது பாதுகாப்பு அச்சப்பாடுகள் தொடர்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளில் நான் மட்டுமே படுகொலை செய்யப்படும் சூழ்நிலையை எதிர்கொண்டேன். எனக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்தே வந்திருக்கின்றது. இவ்வாறிருக்கையில் எந்த அடிப்படையில் பாதுகாப்பு நீக்கப்பட்டது? என்று அந்தக் கடிதத்தில் சந்திரிகா கேள்வி எழுப்பியுள்ளார்.

பதவியில் இருந்தபோது மட்டுமல்ல, பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களை தான் எதிர்கொண்டதாகவும், எதிர்கொண்டு வருவதாகவும் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் உயிர் நீத்தோருக்காக சொந்தச் செலவில் நினைவுத்தூபி!

## அங்கஜன் தெரிவிப்பு

வவுனியா, நவ.6

உள்நாட்டுப் போரில் உயிரிழந்த மக்களுக்கு எனது சொந்தச் செலவில் நினைவுத்தூபி அமைக்கத் தயார் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

நீண்டகால உள்நாட்டுப் போரால் நாட்டு மக்கள் பலரை இழந்து விட்டோம். இனங்களுக்கிடையே புரிந்துணர்வு இன்மை மற்றும் சமஉரிமை கிடைக்காமை உள்ளிட்ட காரணங்களால் உள்நாட்டுப் போர் உருவாகி அது பலரையும் காவு கொண்டு விட்டது. போரால் தமிழ் மக்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். போர் மௌனித்து 15வருடங்கள் கடந்து விட்ட போதிலும் தமிழ் மக்கள் போர் வடுவில் இருந்து மீள முடியாமல் உள்ளனர். அத்தோடு தமிழ் மக்களுக்கு உறவுகளை நினைவு கூர்வது கூட சவால் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகிறது. இந்த நிலையில் பொதுவான நினைவுத் தூபி ஒன்றை அமைத்து யுத்தத்தில் உயிரிழந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு அரசாங்கம் அனுமதி வழங்கும் பட்சத்தில் எனது சொந்தச் செலவில் பொதுவான நினைவுத் தூபியை நிறுவ நாட்டில் நல்லிணக்கத்தை மலரச் செய்வது சிறந்த ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உருவாக்க முடியும்- என்றார். (ச-27)



# சாதனைச் சிறுமிக்கு ஊக்குவிப்பு நிதி

யாழ்ப்பாணம், நவ.6

சதுரங்க விளையாட்டுத் துறையில் சாதனையீட்டிவரும் இணுவிலைச் சேர்ந்த கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயின்று வரும் த. கஜிஷனாவுக்கு இணுவில் பொது நூலக கனடா அமைப்புக் குழுவினர் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான ஊக்குவிப்புத் தொகை காசோலையை கையளித்துள்ளனர். அதேவேளை புலம்பெயர் வாழ் இணுவிலைச் சேர்ந்த அன்பர் ஒருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த சிறுமியின் வீட்டுக்குச் சென்று இரண்டு லட்சம் ரூபாவை வழங்கினார்.

குறித்த சிறுமி தாய்லாந்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆசிய சதுரங்க இறுதிப் போட்டியில் இலங்கையின் உத்தியோகபூர்வ வீரராக விளையாடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66)

# பனை அபிவிருத்திச் சபையின் தலைவருக்கு எதிராக களேபரம்

யாழ்ப்பாணம், நவ. 6

பனை அபிவிருத்தி சபையின் புதிய தலைவர் வி.சகாதேவனுக்கு எதிராக பனை அபிவிருத்திச் சபையின் ஊழியர்கள் நேற்றுப் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பனை அபிவிருத்தி சபையின் புதிய தலைவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பதவியேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது, 'பனை அபிவிருத்திச் சபையின் ஊழியர்கள் பனை தறிப்பதற்காக விதிக்கப்படும் தண்டப் பணத்தில் இருந்துதான் சம்பளம் பெற்றுக்கொள்கின்றனர்' என்றவாறாகத் தெரிவித்திருந்தார்.

அவருடைய கருத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த பனை அபிவிருத்தி சபையின் ஊழியர்கள், தலைவர் தன்னுடைய கருத்துக்காக மன வருத்தத்தையும் மன்னிப்பையும் கோர வேண்டும் என்று அவரிடம் நேற்று வலியுறுத்தியுள்ளனர்.

எனினும், புதிய தலைவர் மன்னிப்புக் கோரமுடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்ததைத் தொடர்ந்தே பணியாளர்கள் அவருக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிர்வாகத்தை முடக்கிப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, பனை அபிவிருத்தி சபையின் முகாமையாளர் இந்த விடயத்தில் தலையிட்டதைத் தொடர்ந்தே நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

'பனை அபிவிருத்தி சபையின் புதிய தலைவர் வி.சகாதேவன் பொதுவெளியில் தெரிவித்த அநாகரிகமான வார்த்தைகளால், மக்கள் தம்மைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர்' என்றும் பனை அபிவிருத்தி சபையின் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

தேவை

மிருசுவிலில் இயங்கும் தளபாட நிலையம் ஒன்றிற்கு பணம் அறவிடும் உத்தியோகத்தர் தேவை.

076 696 9938
076 850 4007

IELTS - 09.11.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance English Grammar Classes

இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.

Student Visa மற்றும் Work Visa (Auxiliary Nurse) ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்

By: B.MURALI- 077 798 9830

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்

- 20 அடிப்பாதை
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00- மாலை 6.00
- தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு:

070 168 3354, 070 668 3354

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 96 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- ▲ 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ▲ 2 ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- ▲ 2 பரப்புள்ள துண்டு ஒன்றுக்குள் 6 தொடக்கம் 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- ▲ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- ▲ அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

ஒரு பரப்பின் விலை

- ▲ நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ கடற்கரையை (Beach) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே

- ▲ தரகர் தேவையில்லை
- ▲ பார்வையிடும் நேரம் - காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு: ஜெயம்

077 814 7389
077 986 5457

CLEAN Mobile Car Wash

உங்கள் வீட்டுக்கே வரும்

Car Wash and Interior Cleaning
Three Wheel Service
Wash Bike Service
Cut and Polish

உங்கள் வீட்டுக்கே வந்து SERVICE செய்து தரப்படும்

CONTACT :- 0776466701

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல் : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org